
உ

# அருள் ஒளி



ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
மகோற்சவ சிறப்புமலர்

இதழ் 155

ஆவணி 2021


ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தால்**
**வெளியிடப்படவுள்ளது.**

நிதி அனுசரணை:
**பன்னாலை அமரர் கந்தையா திருநாவுக்கரசு J.P**
(இளைப்பாறிய அதிபர்)
**திருமதி சிவபாக்கியம் திருநாவுக்கரசு தம்பதிகள்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)


ஆசிரியர்

கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

திரு. ப. சேயோன் அவர்கள்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

T.P : 021 321 3151, 021 224 1909

e.mail: thurkaiammantemple@gmil.com
face book: @tellidurga

ஆவணி - 2021 மாதமலர்

பதிவு இல: ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3


## ஆலயங்களில் பெருந்திருவிழாக் காலம்

சரித்திரப் பிரசித்தி பெற்ற பல ஆலயங்களின் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி நடைபெற்றும் கொண்டிருக்கிறது. கொரோணா என்னும் கொடியநோயின் ஆபத்தும் எம் நாட்டில் அதிகரித்த வண்ணமாகவுள்ளது. இந்நிலையில் ஆலயங்களில் நித்திய நைமித்திய பூசை வழிபாடுகளை நடாத்துவதில் பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளது. வடமராட்சிப் பகுதியில் சில ஆலயங்கள் சுகாதாரப் பகுதியினரால் பூட்டப்பட்டு தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ் விடயம் குறித்து சைவ மக்கள் மிகுந்த கவலையடைந்துள்ளமை உணரமுடிகிறது. குறிப்பாக அடியார்கள் ஆதரவற்றவர்களின் வயிற்றுப் பசியைப் போக்குகின்ற சந்நிதியான் ஆச்சிரமமும் சுகாதாரப் பகுதியினரால் அன்னதானப்பணி செய்தமை தொடர்பாக அதன் சேவை முடக்கப்பட்டுள்ளமை ஊடகங்கள் வாயிலாக பலரும் அறிந்து கவலை தெரிவித்த வண்ணமுள்ளனர்.

மருத்துவ சமூகம் மக்கள் நன்மை கருதி ஒன்று கூடாதீர்கள் என மன்றாடிய வண்ணமுள்ளனர். ஆனால் மக்களோ கேட்பதாக இல்லை. குறிப்பாக ஆலய விழாக்கள் அமைதியாக நடாத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதை விடுத்து வழமை போல் திருவிழாக்களைச் செய்யவேண்டும். எனக் கருதி கட்டுப்பாடுகளை மீறுவது ஆபத்தானது. சமூகப்பொறுப்பற்ற செயற்பாடாக அறிவுசார் சமூகம் கண்டிக்கத் தவறாது. எனவே ஆலய அறங்காவலர் சபைகள் நிதனமாகச் சிந்தித்து பக்தர்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு நடக்கவேண்டும். உள்வீதியில் திருவிழாக்களை அமைதியாக நடாத்தி மக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்க்கவேண்டும். ஆலயச் சூழலில் சிறுகுழந்தைகள், வயோதிபர், நோயாளர் நடமாடுவது மிக ஆபத்தென்பதை நாமாக உணர்ந்து செயற்படவேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களில் திருவிழாக்கள் இடையில் தடைப்படுவது மிக வேதனைக் குரியது. அதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கமல் நாம் நடந்துகொள்ள வேண்டும். சுகாதாரத் துறையினர் ஆலயத் திருவிழாக்கள் ஆரம்பிப்பதற்கு முன் சரியான அறிவுரைகளை தக்க முறையில் வழங்காது விழா நடைபெறும் போது இடையில் தடுத்து நிறுத்துவது என்பது மிக வேதனைதரும் செய்தியாகும்.

உலகை உலுக்கும் கொரோணா கிருமியின் கெடுதியிலிருந்து உலகம் உய்வதற்கு அனைவரும் வீடுகளில் பிரார்த்தனை செய்வதோடு தமது பாதுகாப்பை தாமே உறுதிப்படுத்தி தம் நாளாந்த கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

இவ்விடயங்களில் கெட்டித்தனம் பேசி நாம் வென்றுவிட்டோமென்று எதுவுமில்லை. உலகத்துக்குப் பொருத்தப்பாடாக மனிதன் மனிதத்தை காக்கவேண்டும். எனவே ஆலயங்களில் மிகப் பாதுகாப்பான முறையில் சுகாதார ஒழுங்குகளைப் பேணி நித்திய நைமித்திய பூசை வழிபாடுகளை யாவரும் நெறிப்படுத்துவீர்களாக.



உ

அம்பாள் துணை

## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## தலைவாசற் கோபுரத் திருப்பணி

ஸ்ரீ துர்க்கை அம்பாளின் தலைவாசற் கோபுரத் திருப்பணிக்கான அன்பளிப்புக்களை பின்வரும் வங்கிக் கணக்கின் மூலம் செலுத்தலாம். அல்லது தேவஸ்தான அலுவலகத்தில் நேரடியாக வழங்கி பற்றுசீட்டினை பெற்றுக்கொள்ளலாம்.




**இலங்கை வங்கி, சுன்னாகம்.**

**கணக்கு இலக்கம்: 77683985**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வமென்பதோர் சித்தம்

**அன்னை, சிவத்தமிழ்ச்செல்வி, கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி,**
முன்னாட் தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

உலகெலாம் உணர்ந்தோதுதற் கரியவன் இறைவன். அவன் அடியார்க்கு அண்மையன். அன்பிலார்க்குச் சேய்மையன். நண்ணினார்க்கு நல்லன். நண்ணார்க்கு நலமிலன். இன்ப வடிவினனாக விளங்குவதால் அவன் திருவடிகளை அடைவோர் பூரண இன்பத்தை அடைகின்றனர். இந்த இன்பமே அமைதியையும், தூய்மையையும் ஆனந்தத்தையும் நல்கிறது. துன்பத்தை வெறுத்து இன்பத்தை அடைவதற்கே ஒவ்வொரு உயிரும் துடித்துக்கொண்டிருக்கிறது. அந்த இன்பத்தைக் கடவுள் நம்பிக்கையின் மூலமே அடைய முடியும். "இன்பமே எந்நாளும் துன்பமில்லை"யென்று அப்பரடிகளும் "செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே" என்று சம்பந்த சுவாமிகளும், "திருவும் மெய்ப்பொருளும் எனக்குன் சீறாடைக் கழல்கள்" என்று சுந்தரரும், "இன்பமே என்னுடைய அன்பே" என்று மணிவாசகரும் பாடியருளியமை இந்த உண்மையைப் புலப்படுத்துகிறது. புறஉலக வெப்பினால் வெதும்பி நிற்கும் உயிர்களுக்கு இறைவனது திருவடி நீழலே அமைதியான இன்பத்தை அளிக்கும் என்பது அருளாளர்களின் அனுபவம்.

தெய்வமென்பதோர் சித்தம் எல்லார்க்கும் ஏற்படுவதாகத் தெரியவில்லை. "எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" என்று மணிவாசகப் பெருமான் கதறுகிறார். ஏனெனில் மானிடப் பிறவிதான் தெய்வம் என்பதோர் சித்தம் ஏற்படுவதற்குரிய பிறவி. அந்தப் பெருநோக்கத்துடன் தான் நமக்கு இப்பிறவி தரப்பட்டது. மணமுள்ள மலர் மேன்மை அடைவதுபோல் தெய்வ வழிபாடுள்ளவனது வாழ்வு தூய்மையும் பொலிவும் அடைகிறது.

ஆனால் இந்தநிலை நமக்கு வரவேண்டியதும் அவனருளால்தான் நிறைவேறும். பொருளல்லவற்றை பொருளென்றுணரும் மருள் நம்மை விட்டகலாவிட்டால் அருள் தோன்றாது. வாழ்விலே பலகாலத்தை முத்தி நெறியறியாத கூட்டத்தாரோடு செலவுசெய்து விடுகின்றோம். அதிலிருந்து ஒருவாறு தப்பினாலும் கல்வி ஆராய்ச்சிகள் நம்பாதையை மாற்றிவிடவும் கூடும். செல்வச்செருக்கும் நெறியை மாற்றுவதுதான். வறுமையின் கோரப்பிடியும் அப்படியே. இவற்றிலிருந்து நாம் ஒவ்வொன்றாகத் தப்பிச்செல்லும் போதுதான் உயிருக்கு ஒரு தன்னுணர்வு ஏற்படுகின்றது. அந்த உணர்வை கலைக்கும் மாயாசக்திகளையும் வென்றால் தெய்வம் என்பதோர் சித்தம் நிலைபெற்றுவிடும். இந்த நிலையடைந்த தன்மையை மணிவாசகப் பெருமான் போற்றித் திருவகவலில் அழகாக அருளியிருக்கின்றார்.

இறைவனுடைய திருவடியை பற்றுக்கோடாகக் கொண்டவர்களுக்கு உயிரைப் பற்றிய பாரம் நீங்கிவிடும். கடலில் விழுந்தவன் ஒன்றை பற்றிக்கொள்ளும் வரை தத்தளிப்பான். பற்றிவிட்டால் இனித் தன்செயலில்லை என நினைத்து ஆறுதலடைவான். அருணகிரிநாதரும் முருகப்பெருமானை நோக்கி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'எல்லாமற என்னை இழந்த நலம்**
**சொல்லாய் முருகா சுர பூபதியே'**

எனக் கேட்டு நின்றார். அவ்வவர் வினைக்கேற்ப பிறவியைத் தருபவனை வினைநீங்குவதற்குரிய வழியைக் காட்டுபவனும் அவ் வழியில் நிற்பவரை வலிய வந்து ஆட்கொள்பவனும் இறைவன் ஒருவனே.

**பவவினை நூறுங்கூட்டி சிவமதி தானுங் கூட்டி**
**பதி பசு பாசங் காட்டி - மலம்மாய**
**படிமிசை போவென்றோட்டி அடிமையை நீவக்தேத்தி**
**பரகதி தானும் காட்டி அருள்வாயே'**

என்று மேலும் வேண்டுகிறார் அருணகிரியார்.

பதி, பசு, இரண்டும் சித்துப் பொருட்கள். பாசம் சடப்பொருள். முன்னைய இரண்டும் அறிவுடையவையென்னும் பசு, அறிவிக்க அறியும் தன்மையுடையது. பதி இயல்பாகவே அறியும் இயல்பினது. ஆன்மாக்களுக்கு உணர்த்துவதும் பதியே. இது ஆன்மாக்கள் அனைத்திலும் வியாபித்து அறிவுக்கு அறிவாய் நின்றுணர்த்துகிறது. இவ்வுணர்வு பெற்ற வழியே தெய்வமென்பதோர் சித்தமுண்டாகின்றது. இந்த நிலையிலே நின்ற அப்பரடிகள்.

**என்னி லாரு மெனக்கினி யாரில்லை**
**என்னி லும்மினி யானொரு வன்னுளன்**
**என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்**
**கென்னு ளேநிற்கும் இன்னம்ப ரீசனே.**

என்று பதிகம் பாடினார்.

மணிவாசகப் பெருமானும் உலக பந்த பாசங்களினின்றும் நீங்கி இறையுணர்வு ஏற்பட்ட நிலையை திருவாசகத்தில் நயமுற எடுத்துப் பாடியுள்ளார்.

**'நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்**
**மாயப் பிறவி உன் வசமே வைத்திட்டிருக்கும் அதுவன்றி**
**ஆயக் கடவேன் நானோதான் என்னதோ இங்கதிகாரம்**
**காயத்திடுவாய் நின்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே'**

இவ்வாறு அருளாளர்கள் சென்ற வழியிலே நாமும் சென்று அனுபவித்தலைத் தான் வழிபாடு என்று சொல்கிறார்கள். "படு" என்ற பதம் "பாடு" என நீண்டு அனுபவித்தல் என்ற கருத்தை விளக்குகிறது. இந்த அனுபவ முதிர்ச்சியிலே மேம்பட்ட நாயன்மார்களும் ஆலய வழிபாட்டு நெறியில் தலை நின்றார்கள். வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்த சென்னியும் தந்த தலைவனுக்கு வழிபாட்டின் மூலம் நன்றி செலுத்தினர்.

ஆகவே, நாம் மானிடப் பிறவி எடுத்ததன் நோக்கம் இறைவன் திருவடியை அடைவதற்கேயென்பதும், இறையருள்தான் எமக்குத் தெய்வமென்பதோர் சித்தத்தை நல்கிறது என்பதும் அந்த உணர்வை ஆலய வழிபாட்டின் மூலம் நாம் பெறலாம் என்பதும் புலனாகிறது.

**நன்றி: தெய்வத்திருமகளின் வாழ்வும் பணிகளும் - 2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் வழிபாடு

முனைவர், சந்திரிகா சுப்ரமண்யன்

பிள்ளையார் வழிபாடு என்பது இன்று நேற்று உருவானது அல்ல. காலம் காலமாக மக்கள் மத்தியில் நின்று நிலைத்து தொடர்ந்து வரும் வழிபாடுகளில் மிகவும் முக்கியமானது கணபதி வழிபாடாகும்.

ஆல்மரம், அரசமரம், வன்னிமரம், வேப்பமரம், ஆற்றங்கரை, குளக்கரை, முச்சந்தி, மலை, சந்து, நாற்சந்தி எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் ஒரு பிள்ளையார் இருப்பதைக் காணலாம். மக்கள் கையில் மிகச் சுலபமாக எந்தப்பொருள் கிடைக்கிறதோ அதைக்கொண்டு பிள்ளையாரின் திருமேனியை சமைத்து வழிபாடு செய்துவிடலாம்.

களிமண், பசுஞ்சாணம், பசு வெண்ணெய், பனைவெல்லம், மஞ்சள், கருங்கல், உலோகங்கள், வெள்ளை சலவைக்கல், அத்திமரம், வெள்ளெருக்கம் வேர், ஆகியவற்றால் விநாயகர் விநாயகர் உருவங்கள் செய்யப்படுகின்றன. ஆனால் வெள்ளெருக்க வேரில் உருவாக்கப்பட்ட பிள்ளையார் வழிபாட்டிற்கு சிறப்பானதாகும்.

பொங்கல் திருநாளன்று பிள்ளையார் பசுவின் சாணத்தில் மட்டுமே செய்யப்படுவதுடன் பண்டிகை மற்றும் சிறப்பு விரத தினங்களில் மஞ்சள் பிள்ளையாரே வழிபாட்டில் வைக்கப்படுகின்றார்.

விநாயகர் மிக எளிமையானவர். அவரது வழிபாடும் எளிமையானது. ஆனால் விநாயக தத்துவம் ஆழ்ந்த பொருள் கொண்டது. விநாயகருக்கு மோதகம் படைக்கின்றோம். மேலே மாவு மூடியிருக்க உள்ளே வெல்லம், தேங்காய், பயறு கலந்த பூரணம் இருக்கும். இதன் பொருள் என்னவென புரிந்து கொள்ள வேண்டும் மாவுதான் மாயை- அதாவது ஆசைமுதலான உலகப்பற்றுக்கள், அந்த மாயையை விலக்கினால் உள்ளே இருப்பது பூரணம் என்னும் ஆனந்தம்.

**விநாயக வடிவத்தின் விளக்கம்**

ஓம் என்ற ஞான வடிவினனே விநாயகப் பெருமான். அவரது வாயின் வலதுபுற ஓரம் தொடங்கி கன்னம், தலைவழியாகச் சுற்றிக்கொண்டு இடது புறத்தில் தும்பிக்கைவழியாகக் கீழே இறங்கி, தும்பிக்கையின் வளைந்த நுனிவரை வந்தால் ஓம் என்னும் வரிவடிவைக் காணலாம்.

இந்நிறத்தான், இவ்வண்ணத்தான், இவன் இறைவன் என்று எழுத்தாலோ சொல்லாலோ உணர்த்த முடியாதவனே இறைவன். அவன் அருளாலே அவன் தாழ் வணங்கி, உணர்ந்து, உருகி, நெஞ்சில் நிறுத்தி அனுபவிப்பதே இறை இன்பமாகும்.

அப்படிப்பட்ட இறைவனின் முதல் வடிவமும் முழுவடிவமும் ஓம் என்ற ஓங்கார ஒலியின் வரிவடிவத்திற்குள் அடங்குகின்றது. இந்து மதத்தின் அனைத்து மந்திரங்களும் இந்த ஓங்காரத்தின் பின்னால் வரக்கூடியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் என்ற ஒலியே முதல் ஒலியாகும். அந்த ஓம்காரத்தையே நாம் பிரணவ மந்திரம் என்கின்றோம். பிரணவ மந்திரத்தின் பொருளும் வடிவமும் விநாயகப் பெருமானே ஆவார்.

ஓம் என்னும் பிரணவமந்திரம் மூன்று எழுத்துக்களால் ஆனது. அகரம், உகரம், மகரம் ஆகிய அ, இ, உ மூன்றுமே முன்றுமே அவை.

அ என்ற எழுத்து பிரம்மாவைக் குறிக்கும். அதாவது படைத்தல்த் தொழிலின் அம்சமாக இருப்பது இந்த எழுத்து. உ என்ற எழுத்து விஷ்ணுவைக் குறிப்பது. எனவே இது காத்தல் தொழிலைக் குறிப்பதாகும். ம என்ற எழுத்து சிவனைக் குறிப்பதாகும். இது அழித்தல் தொழிலைக் குறிப்பதாகும். ஆக முத்தொழில்களின் அம்சமாகவும் மும்மூர்த்திகளின் அம்சமாகவும் கணபதி விளங்குகிறார்.

**மூலாதாரச் சக்கரம்**

விநாயகர் வழிபாடு மூலாதாரச் சக்கரத்துடன் தொடர்புடையது. நாம்செய்த கர்ம வினைகளுக்கேற்ப நமது உடல் அமையும். மனித உடலில் அவன் செய்த வினைப்பதிவுகள் அனைத்தும் மூலாதாரச் சக்கரம் என்று சொல்கின்ற முதல் சக்கரத்தில் பதிந்துள்ளது. அதற்கு நாயகன் விநாயகர் ஆவார்.

நமது உடல் உறுப்புகளை இயக்குவது வெவ்வேறு சக்கரமாகும். உடம்பில் உள்ள முக்கியமான ஆறு ஆதார சக்கரங்களை,

1. மூலாதாரம் - கணபதி
2. சுவாதிஷ்டானம் - பிரம்மா, மகாலக்ஷ்மி
3. மணிபூரகம் - மகாவிஷ்ணு, மகாலக்ஷ்மி
4. அனாகதம் - சிவன், பார்வதி
5. விசுக்தி - அர்த்தநாரீஸ்வரர்
6. ஆக்ஞை - சதாசிவம்
7. சிதாகாசம் - வெட்டவெளி

என்று நம் முன்னோர் வழிவந்த சித்தர்கள் வகைப்படுத்தி வழி காட்டியுள்ளனர். இதில் எல்லா சக்கரத்திற்கும் மூலாதாரச் சக்கரமாக முதல் சக்கரம் இருக்கிறது. அதற்கு தலைவர் கணபதி. இவர் அருள் கிட்டினால் நாம் அடுத்தடுத்த சக்கரத்திற்கு செல்லமுடியும்.

நமது முதுகெலும்பில் உள்ள அளப்பரிய சக்தி மூலாதாரச் சக்தியாகும். இந்த சக்தி நெருப்பை ஒத்தது. சிறிது சிறிதாக அது மேலெழுகின்றது. மூளையின் உச்சிவரை மூலாதாரச் சக்தி மேலெழும் செயலை மூலாதாரச் சக்கரம் என்கின்றோம். பிள்ளையாரின் நிரந்தர வாசஸ்தலம் முள்ளந்தண்டு முனையிலுள்ள மூலாதாரமே. அதனை முன்னிறுத்துவதுதான் "ஓம்" என்ற மந்திரம்.

ஔவையார் அருளிய விநாயகர் அகவல், இறைஞானம் அடைந்து முக்தி பெறும் ஆன்மிக வழியை முழுமையாகவும் படிப்படியாகவும் எழுபத்திரண்டே வரிகளில் மிக அழகாகப் பாடப்பெற்ற ஈடு இணையற்ற அற்புத நூல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் மூன்று பகுதிகளில் விநாயகரை பாதாதிகேசம் வர்ணித்து ஓர் எளிமையான பக்தி நூலாக ஔவை துவங்குகிறார்.

நான்கு மற்றும் ஐந்தாம் பகுதிகளில் ஆச்சாரியன் நயன தீட்சையாக ஆத்ம ஞான செயல் விளக்கம் செய்து காட்டி அருளிய அற்புதத்தை விவரிக்கிறார். ஆறாம் பகுதி தொடங்கி பத்தாம் பகுதி வரையில் மறைப்பு சக்தியான திரோதான சக்தி மறைந்து அருட்சக்தியாக ஆத்மாவில் பதிந்து சத்திநிபாதம் உண்டாகும் அற்புதத்தை தாந்த்ரீக யோகமார்க்கத்தில் விவரிக்கிறார்.

பதினொன்றாம் பகுதி தொடங்கி பதினான்காம் பகுதி வரையில், இறைஞானம் அடைந்து முக்தி அடையும் அற்புதத்தை சித்தாந்த ஞானமார்க்கத்தில் விவரிக்கிறார்.

**விநாயகர் திருக்கோலம்**

கவிராட்சசர் என்று அழைக்கப்படும் கச்சியப்ப முனிவர் தான் இயற்றிய தணிகை புராணத்தில் விநாயகரின் திருக்கோலத்தை பின்வருமாறு விளக்குகிறார்.

அதாவது, விநாயகரின் ஐந்து கரங்களில் ஒன்று மோதகம் ஏந்தியும் மற்றொன்று தீர்த்த கலசம் ஏந்தியும் வேறொன்று தந்தத்தை ஏந்தியும் மற்ற இருக்கைகளில் அங்குசமும் பாசமும் தரித்து காணப்படுவது ஏன் என்ற விளக்கத்தையும் தருகிறார்.

சுவை மிகுந்த மோதகம் ஏந்திய கரத்தை தனக்காகவும், தந்தம் ஏந்திய கரம் தேவர்களை பாதுகாப்பதற்காதகவும், தீர்த்த கலசம் ஏந்திய கரம் அம்மையப்பனாகிய உமா மகேஸ்வரனை வழிபடுவதற்காகவும், தன்னை வழிபடும் பக்தர்களுக்காக அங்குசம் பாசமுடைய இருகைகளையும் பயன்படுத்துகிறார் என்பது கச்சியப்ப முனிவரின் கூற்றாகும்.

விநாயகன் தலையானை வடிவில், கழுத்துக்குக் கீழே மனித உடல், மிகப்பெரிய வயிறு, இடது பக்கம் நீண்ட தந்தம், வலது பக்கம் சிறிய தந்தம் ஆகியவை உடையவன்.

நீண்ட தந்தம் ஆண் தன்மையையும், சிறிய தந்தம் பெண் தன்மையையும் குறிக்கும். அதாவது ஆண், பெண் ஜீவராசிகள் அவருள் அடக்கம். யானை எனும் அகறிணை, மற்றும் மனித வடிவில் உயர்திணை. ஆக அகறினை, உயர்திணை இரண்டும் கலந்தவர் விநாயகர்.

பெரும் வயிற்றைக் கொண்டதால் பூதர்களையும் உள்ளடக்கியவர். ஆக அவரே அனைத்தும் என்பதை இந்து தத்துவம் உணர்த்தி நிற்கிறது. விநாயகரின் பின்புறம் உள்ள வலது கையில் அங்குசம், பின்புறம் இடது கையில் பாசக் கயிறு, முன்பக்கத்து வலது கையில் ஒடித்த தந்தம், முன்பக்கத்து இடது கையில் அமிர்த கலசமாகிய மோதகம் ஆகியவை இருக்கும்.

இந்த நான்கு கரங்கள் தவிர விநாயகருக்கு துதிகையுடன் சேர்த்து ஐந்து கரங்களிருக்கிறன. அத் துதிக்கையில் புனித நீர்க்குடம் வைத்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக வாழ்வில் உழன்று தத்தளித்துத் களைத்துத் தன்னைச் சேரும் மக்களின் தாகம் தணித்து களைப்பைப் போக்கி பிறப்பற்ற நிலையை அளிக்க இப் புனித நீர்க்குடத்து நீரினால் உதவுகிறார். அங்குசம் யானையை அடக்க உதவும் கருவி. இவரது அங்குசமோ மனம் என்ற யானையைக் கட்டிக் போடும் வல்லமை படைத்தது. அதனால்தான் முகம் யானை வடிவில் இருக்கிறது.

பாசக்கயிறு கொண்டு தன் பக்தர்களின் எதிரிகளைக் கட்டிப் போடுகிறார். ஒடித்த ஒற்றைத் தந்தம் கொண்டு மகாபாரதம் எழுதுகிறார். இது மனிதன் முழுமையான ஞானம் பெறவேண்டும் என்பதைக் குறிக்கிறது. இடது கையில் மோதகம் வைத்துள்ளார். சாதாரண மோதகம் அல்ல இது. உலகம் உருண்டை. மோதகமும் உருண்டை. உலகத்துள் சகல உயிர்களுக்கும் அடக்கம் என்பது போல, தனக்குள் சகல உயிர்களும் அடக்கம் என்பதைக் காட்டுகிறது.

**திருவுருவ விளக்கம்**

**திருவடி**

ஆன்மாவைப் பொருந்தி நின்று மலகன்ம மாயைகளை தொழிற்படுத்தி இருமை இன்பத்தை அளிப்பது ஞானம். அந்த ஞானமே விநாயகரின் திருவடிகளாக இருக்கின்றன.

**பெருவயிறு**

ஆகாசம் எல்லாப் பொருள்களும் தன்னகத்து ஒடுங்கவும், உண்டாகவும் இடந்தந்து இருப்பது போலப் பெருவயிறாகிய ஆகாசமும் எல்லா உலகங்களும் உயிர்களும் தம்முள் அடங்கியிருக்கின்றன என்பதைக் குறிப்பிடப்படுகின்றது.

**ஐந்துகரங்களும் ஐந்தொழில்களும்**

1. ஐந்தொழில்களுள் முதலாவது படைத்தல் தொழில். உலகைப் படைக்கும் பெரும் பொறுப்பில் இறைவன் இருக்கிறான். பிள்ளையாரின் ஒரு கை பாசத்தை ஏந்தியுள்ளது.

2. ஐந்தொழில்களுள் இரண்டாவது காத்தல் தொழில். பிறவி எடுத்தாலே வினை சூழ்ந்து கொள்கிறது. துன்பங்களும் இன்பங்களும் மாறி மாறி வருகின்றன. இன்ப துன்பங்களில் இருந்து விடுபட்டு ஓடி, பிறவியில் இருந்து விடுபட வரும் உயிர்கட்கு அஞ்சேல் எனப் பாதுகாப்பு அளிக்கும் கை அபயக் கை. தந்தம் ஏந்திய கை காத்தலை குறிக்கிறது. எனவே இவரே மகாவிஷ்ணுவாகிறார்.

3. பிள்ளையாரின் ஒரு கையில் அங்குசம் உண்டு. அங்குசம் அழித்தலைக் குறிக்கும். ஐந்தொழில்களுள் மூன்றாவதாகிய அழித்தல் தொழிலை அங்குசம் தாங்கிய கை செய்கிறது. இவர் ருத்ரா ஆகிறார்.

4. ஐந்தொழில்களுள் நான்காவது அருளல் தொழில். அஞ்சேல் எனப் பாதுகாப்பு அளித்த அபயம் பெற்ற உயிர்கட்கு அருளலைச் செய்வது மோதகம் ஏந்திய கையாகும். இந்தக் கை கீழ் நோக்கி இருப்பதன் காரணம், பிறவிக்கு அஞ்சி வரும் உயிர்கள், அடையுமிடம் திருவடியாகிய முத்திப் பேறு என்பதை உணர்த்தவேயாம். எனவே, இவரே சர்வ சக்தி படைத்த பரமேஸ்வரனாகவும் இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஐந்தொழில்களுள் ஐந்தாவது மறைத்தல் தொழில். திரோதானமாகிய இந்தத் தொழிலைச் செய்வது தும்பிக்கையே. துதிக்கை அனுக்ரகம் செய்கிறது.

**கொம்புகள்**

பிள்ளையாரின் முகத்தில் இரு கொம்புகள் உள. இடது பக்கத்தில் உள்ள கொம்பு முழுமையான அழகான கொம்பு.

வலது பக்கத்தில் உள்ள கொம்பு ஒடிந்த கொம்பு. வலது பக்கத்தில் முழுமையான நீட்டுக் கொம்பு இருந்தது. பிள்ளையார் பாரதக் கதையை எழுதியவர். வியாச பகவான் சொல்ல எழுதியவர். அப்பொழுது, வலது கொம்பை உடைத்து எழுத்தாணியாகப் பயன்படுத்தி எழுதினார். இதனால் வலது கொம்பு உடைந்த கொம்பாகவே உள்ளது.

இடது கொம்பு பதிஞானத்திற்கு உரியது. ஒடிந்த வலது கொம்பு பாசஞானத்திற்கு உரியது. ஐந்தாவது வேதம் எனக்கருதப்படும் மகாபாரதத்தை எழுதுவதற்காக தமது கொம்பையே ஒடித்தது, வெளித்தோற்றத்தை விட அறிவுக்கு முன்னுரிமை தர வேண்டியதை உணர்த்துகிறார்.

**தாழ்செவி**

அகன்று விரிந்த யானையின் செவிகளை ஒத்த இரு செவிகள் பிள்ளையாருக்கு உண்டு. இந்த முறம் போன்ற விநாயகரின் பெரிய காதுகள் செவியில் விழும் செய்திகளை சலித்து நல்லவற்றை மட்டும் தேர்ந்து வைத்துக்கொள்ளவேண்டும் என்பதைக் குறிக்கின்றன. உயிர்கள் மலங்களின் பிணிப்பால் துன்பப்படாமல் இச்செவிகள் காக்கின்றன. வினைகளினால் வரும் துன்பங்களில் இருந்து போக்கி அருள்கின்றன.

**கண்கள்**

பிள்ளையாருக்கு மூன்று கண்கள் உள. வழமையான இரு கண்களுடன் நெற்றிக் கண்ணும் சேர்ந்து மூன்று கண்களாக உள.

**பிறை**

பிறைச் சந்திரனைத் தனது முடியில் பிள்ளையார் அணிந்துள்ளார். குற்றங்கள் தேய்ந்து உடல் சிறுத்து, வட்டமான சந்திரன் பிறைவடிவம் கொண்டது.

அறியாமை என்னும் இருள் தேய, ஞானம் பெற்ற உயிர்களை உயர்ச்சி அடையச் செய்து தலைமேல் வைப்பர் பிள்ளையார் என்பதையே முடியில் உள்ள பிறை எடுத்துக்காட்டுகிறது.

**பாம்பு**

பிள்ளையார் பாம்பை ஆபரணமாக அணிந்துள்ளார். பாம்பு குண்டலினி சக்தியின் வடிவம்.

**நன்றி- 'கற்பக விநாயகர்' - 2019**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயக சதுர்த்தி விரத மகிமை

செ. றஜிகா,
திருமகள் அழுத்தகம்,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

பிரணவப் பொருளாய், முதற் தெய்வமாய் போற்றப்படும் விநாயகப் பொருமானின் விரத விழாக்களில் முதன்மைபெறுவது "விநாயகர் சதுர்த்தி" யாகும். ஆவணி மாத அமாவாசை கழிந்த சதுர்த்தி திதி அன்று இவ்விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. இத்தினமே விநாயகர் பெருமான் அவதார நாளென்றும், கஜமுகாசுரன் சம்ஹாரம் செய்யப்பட்ட நாளென்றும் கூறப்படுவதுண்டு. இத்தினத்தில் விநாயகப் பெருமானை உள்ளன்போடு வழிபடுவோர்க்கு விநாயகர் திருவருள் கடாட்க்ஷம் கிடைக்கும். இவ்விரதம் இருபத்தொரு வருடம் அனுஷ்டிப்பது சிறந்தது.

நாம் எண்ணிய கருமங்கள் எளிதில் முற்றுற விநாயகப் பெருமானை வழிபாடு செய்தே கருமங்களை தொடங்குகின்றோம். அழகை விட அறிவு மேலானது தன்னழகில் ஒரு பாதியை ஒடித்து அறிவிற்கு உதவினார் ஏகதந்தன். (ஒற்றைக்கொம்பன்) ஏனெனில் தனது தந்தத்தை ஒடித்து அறிவு நூலாகிய பாரதத்தை எழுத அதையே எழுது கோலாக உபயோகித்தார். அகிம்சையும், பலமும், பொறுமையும், அறிவும் உருவெடுத்த பிள்ளையாரை ஆவணி சதுர்த்தி அன்று போற்றி வழிபடுவோம்.

விநாயகருக்குரிய விரதங்கள் மூன்றாகும். விநாயக சுக்கிரவாரம், விநாயகசஷ்டி, சதுர்த்தி என்பன. வைகாசிமாதப் பூர்வபக்க முதற் சுக்கிர வாரம் (வெள்ளிக் கிழமை) தொடக்கம் பிரதி வெள்ளிக் கிழமை தோறும் அனுஷ்டிப்பது விநாயக சுக்கிரவார விரதமாகும்.

கார்த்திகை மாத அபரபக்கப் பிரதமை முதல் மார்கழிமாதப் பூர்வபக்கச் சஷ்டி ஈறாக இருபத்தொரு தினங்கள் அனுஷ்டிப்பது விநாயக சஷ்டி விரதமாகும். ஆவணி பூர்வபக்கச் சதுர்த்தி முதல் மாதம்தோறும் வரும் சதுர்த்தியில் அனுஷ்டிக்கும் விரதம் சதுர்த்தி விரதமாகும்.

பொதுவாகவே மற்றைய தெய்வ வழிபாடுகளிடையே விநாயகப் பெருமான் வழிபாடு எளிமையானதாகவும், எளியதாகவும் அமைகின்றது. அந்தவகையில் ஆற்றங்கரை, குளக்கரை, அரச மரத்தடி, தெருச்சந்தி போன்ற இடங்களில் எழுந்தருளி இருப்பார். சந்தனத்தால் அல்லது சாணத்தினால் பிள்ளையார் பிடித்து அறுகுசாத்தி வழிபடலாம். குட்டிக் கும்பிட்டு தோப்புக்கரணம் போட்டு வழிபடுவது பெருமானுக்கு உவப்பானது. விநாயகர் சந்நிதியில் சிதறு தேங்காய் அடித்து வணங்குவர். எமது பாவங்களைத் தேங்காயாகப் பாவனை செய்து பெருமான் முன் சிதற அடித்துத் தேங்காய் சிதறுவது போல எமது பாவங்களும் தீவினைகளும் சிதறி அழிவதையே இத்தத்துவம் விளக்குகின்றது. இதனால் விக்கினங்களைத் தீர்க்கும் விக்னேஸ்வரராக முதல் பூசைக்கு உரியவராக எங்கும் போற்றப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரதம் அனுஷ்டிப்பவர் அதிகாலை எழுந்து நீராடி நித்திய கருமானுஷ்டானங்களை முடித்து விநாயகர் வழிபாடு செய்தல்வேண்டும். வீட்டில் ஓர் இடத்தைச் சுத்தப்படுத்தி, மாவிலை, தோரணம், பூமாலை என்பவற்றால் அலங்கரித்து விநாயகர் திருவுருவை எழுந்தருளப்பண்ணி வழிபடல் வேண்டும். தங்கத்தால், வெள்ளியால் அல்லது மண்ணால் வசதிக்கு ஏற்றபடி விநாயகர் திருவுருவை அமைத்து வழிபடலாம்.

ஆவாகனாதி சோடோபசார பூசை செய்து, நிவேதனம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திர பாராயணம் செய்து வழிபடுதல் முறையாகும். விநாயகருக்கு உவப்பான நிவேதனங்களாகப் பின்வருவனவற்றை அருணகிரிநாதர் குறிப்பிடுவார்.

**'இக்கவரை நற்கனிகள் சர்க்கரைபருப் புடனெய்**
**எட்பொரி யவற்றுவரை - இளநீர் வண்**
**டெச்சில் பயறப்பவகை பச்சரிசி பிட்டு வெள**
**ரிப்பழ மிடிப்பல் வகை - தனிமூல**
**மிக்கவடிசிற் கடலை'**

கரும்பு, நாவற்பழம், விளாம்பழம் முதலிய பழவகை, வெல்லம், பருப்பு, நெய், எள்ளுருண்டை, நெற்பொரி, அவல், துவரை, இளநீர், தேன், பயறு, அப்பவகை, பச்சைஅரிசி (காப்பரிசி), பிட்டு, வெள்ளரிப்பழம், தினைமா, வள்ளிக்கிழங்கு, மோதகம், வெற்றிலை, பாக்கு, தேங்காய், முதலியவற்றைப் பெருமானுக்கு நிவேதனம் பண்ணவேண்டும். மாசிப்பச்சை, கரிசலாங்கண்ணி, வில்வம், அறுகு, இலந்தை, ஊமத்தை, மாவிலங்கை, நாயுருவி, சிறுவழுத்தலைவன்னி, நொச்சி, மந்தாரை, மருக்கொழுந்து, அரளி, கோங்கு, அரசு, வெள்ளெருக்கு, மருது, விஷ்ணுகிரந்தி, மாதுளை, ஜாதிமல்லிகை ஆகிய இருபத்தொரு பத்திர புஷ்பங்களால் அர்ச்சிக்க வேண்டும். அன்று அறுகினால் அர்ச்சிப்பது விஷேடமான தொன்றாகும். இருபத்தொரு அறுகம்புல்லால் அர்ச்சிப்பது சிறப்பானதாகும்.

விநாயகர் சதுர்த்தி விழாவானது சகல கஷ்டங்களையும் தீர்க்கும் புண்ணிய விரத நாளாகும். இந்நாளில் விநாயகரின் சாபம் பெற்ற இருவர் அவரை பூஜிக்கும் பேறு பெறுகின்றனர். விநாயக பெருமான் கைலையங்கிரியில் "நடனம்" புரியும் போது அவர் உருவத்தை கண்டு எள்ளிநகையாடினான் சந்திரன் (தன்னை விட அழகானவர் இல்லை என்ற கர்வமும் கொண்டவன்). இதனால் கோபம் கொண்ட விநாயகர், சந்திரனை தேய்ந்து போகும்படி சாபம் கொடுத்தார். அத்தோடு விநாயகரின் பிரிய நாளான சதுர்த்தி தினத்திலே அவரைப் பார்த்து நகைத்தமையால் அன்றைய தினத்தில் சந்திரனைப் பார்ப்போர் அனைவருக்கும் கஷ்டங்கள் நேரிடும் எனவும் சபித்தமையால் சதுர்த்தியில் சந்திரதரிசனம் (நான்காம்பிறை சந்திரன்) யாரும் செய்வதில்லை. பின் இந்த சாபத்தினால் சந்திரன் கடும் தவம் இருந்து தான் நகைத்த சதுர்த்தி தினத்தில் விநாயகருக்கு பிரியமான உபசார பூசைகள் செய்து அவரை மகிழ்வித்து தன் தவறுக்கு மன்னிப்புகோரி மீண்டும் வளர்பிறை சந்திரனானான். சந்திரனுடைய பூஜாவுபசாரங்களுக்கு மகிழ்ந்த விநாயகர் "ஆவணி சதுர்த்தியன்று உன்னை தரிசிப்பவர்களுக்கு என்னைத் தரிசித்த பலனும் சகல செல்வங்களும் கிடைக்கும்" என சாபவிமோசனம் கொடுத்தருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போன்று துளசி என்ற பெண் விநாயகரை மணந்து கொள்ள வேண்டி நித்தம் அவரை வற்புறுத்தி அவர் தனிமைக்கு இடையூறு செய்தமையால் அவளை செடியாக போகும்படி சபித்து துளசி செடியால் தன்னை பூஜிப்பவர்களும், கஷ்டங்கள் எதிர்கொள்வார்கள் என சாபமிட்டார். இதனால் மனம் வருந்திய துளசி தன் தவறை உணர்ந்து ஒருநாளேனும் தங்கள் திருமேனியை அர்ச்சிக்கும் பேறு தனக்கு வேண்டுமென மன்றாட ஆவணி சதுர்த்தியில் மட்டும் துளசியால் அர்ச்சிப்பவர்க்கு திருமணப்பேறும் சகல போகங்களும் கிடைக்கும் என சாப விமோசனம் கொடுத்தார்.

இப்படி விநாயகரால் சாபம் பெற்றவர்கள் கூட அவரை அர்ச்சிக்கும் பேறு பெற்ற நாள் இந்த விநாயக சதுர்த்தியாகும். எனவே இந்நாளில் திரிகரண சுத்தியோடு விநாயகப் பெருமானை வணங்கி நற்பேறுகள் பலவும் பெற்றிடுவோம்.

**வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழ**<br>
**பான்மைதரு செய்தமிழ் பார்மிசை விளங்க**<br>
**ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்**<br>
**ஆனை முகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்**

## குங்குலியக்கலய நாயனார்.

சோழ நாட்டிலே திருக்கடவூரிலே அந்தணர் குலத்திலே தோன்றியவர் கலயநாயனார். குங்குலியத் தூபமிடும் திருத்தொண்டை நாளுஞ் செய்வதனால் குங்குலியக் கலய நாயனார் எனப்பட்டார். ஆண்டவனருளால் வறுமையை அனுபவிக்கத் தொடங்கிய கலய நாயனார் நிலபுலங்களை விற்றார். இறுதியில் விற்பதற்கு எதுவுமின்றி குங்குலியம் வாங்குதற்கும் வழியின்றித் திகைத்தார். பிள்ளைகளின் பசிக்கொடுமையைத் தாங்கிக்கொள்ள முடியாத மனைவியார் தம் கழுத்திலிருந்த திருமாங்கலியத்தைக் கழிற்றிக் கணவன் கையிற் கொடுத்து, இதை விற்று நெல் வாங்கி வரும்படி சொன்னார். அதை விற்கச் சென்ற வழியில் குங்குலியப் பொதியுடன் வந்த ஒருவன் கண்ணிற்பட்டான். அவனுடன் உரையாடி அந்தப் பொதியைப் பெற்றுக்கொண்டு மாங்கல்யத்தை அவனிடங் கொடுத்தார். குங்குலியத்துடன் ஆலயம் சென்ற கலயனார் அதனைக் களஞ்சிய அறையிலே வைத்துவிட்டுச் சிவ சிந்தனையுடன் இருந்தார். வீட்டிலிருந்தோர் பசிக்களையினால் உறங்கிவிட்டனர். அடியார்க்கெளியராகிய சிவபெருமான் நாயனார் வீட்டிற் பொற்குவியலும் நெற் குவியலுமாக நிறைத்து வைத்தார். விழித்த அம்மையார் செல்வச்செழிப்பைக் கண்டு இறைவன் திருவருளை நினைந்து வியந்தார். தொடர்ந்து சமையல் வேலைகளைக் கவனித்தார். திருக்கோயிலிலுள்ள நாயனார் கனவிலுந் தோன்றி நீ வீடு சென்று அமுதுசெய்து களை நீங்குவாயாக என்றருளினார். வீடுவந்த கலயனார் பொருட் குவையைப் பார்த்து இறைவன் திருவருளை நினைத்து வியந்தார்.

திருப்பனந்தாள் சிவலிங்கஞ் சாய்வு ஏற்பட்டதை எண்ணி வருந்திய மன்னனிடஞ் சென்று அவர் துயரைப் போக்கினார். மன்னன் நாயனாரை வணங்கினான். திருப்பனந்தாளிலிருந்து திருக்கடவூர் சென்றபோது சம்பந்தரும், அப்பரும் அங்கு வந்தார்கள். அவர்களை வரவேற்று உபசரித்தார் குங்குலியக்கலய நாயனார். முறையாகத் தம் கடமைகளைச் செய்த நாயனார் இறைவன் திருவடிநீழலை அடைந்தார். இவர் முத்தியடைந்த திருநாள் **ஆவணி மூலம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகை சிவபூசை செய்தல்

பூசை. ச. அருணவசந்தன்,

உலகில் சிவபூசையொன்றே தலை சிறந்ததாகும். அந்தப்பூசையின் பெருமையை விளக்கவும் வழிகாட்டவும் சிவபெருமானின் ஒரு கூறாகத் தோன்றிய பார்வதிதேவி ஓயாது சிவபூசை செய்கின்றாள். இதனால் அவளுக்குச் சிவபூசைச் செல்வி என்பது பெயராயிற்று.

அவள் ஆதியூழியின் தொடக்கத்தில் சிவபூசை செய்தாள். அவளுடைய பூசையால் மகிழ்ந்த சிவபெருமான் அவளுக்குக் காட்சியளித்து அவளைத் தனது இடப்பாகத்தில் சேர்த்துக் கொண்டார். இருவரும் சேர்ந்து உலகினைப் படைத்தனர். அவள் ஊழிக்கால இரவில் சிவபூசை செய்ததை நினைவு கூறும் வகையில் சிவராத்திரியைக் கொண்டாடுகிறோம்.

பார்வதி சிவபூசை செய்வதைப் பதினெண் புராணங்களும், திருமுறைகளும் தல வரலாறுகளும் சிறப்பாகக் குறிக்கின்றன. மனமகிழ்ச்சியைப் பெறவும். உலக உயிர்கள் நலம் பெறவும் பார்வதி ஓயாது சிவபூசை செய்கின்றாள். அவள் குயிலாகவும், மயிலாகவும், பசுவாகவும், யானையாகவும் இருந்து அனேக தலங்களில் பூசை செய்ததைத் தலபுராணங்கள் குறிக்கின்றன.

பஞ்சபூதத் தலங்களுள் மூன்றில் அம்பிகை கடுந்தவம் புரிந்ததுடன் சிவபூசையும் செய்து மகிழ்கின்றாள். காஞ்சியில் அவள் சிவபூசைசெய்தது தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றது. காஞ்சிபுரத்தில் அவள் மண்ணால் சிவலிங்கம் அமைத்துச் சிவபூசை செய்தாள். திருஆனைக் காவலில் பெருகிவரும் நீரைத்திரட்டி லிங்கம் அமைத்து வழிபட்டாள்.

திருவண்ணாமலையில் பவளப்பாறைமீது நின்று கடுந்தவமும் சிவபூசையும் செய்தாள். அதனால் மகிழ்ந்த சிவபெருமான் அவளை அணைத்து மகிழ்ந்ததுடன் தன் உடலில் ஒரு பாதியையும் அளித்தார். அம்பிகையின் சிவபூசையால் இந்த உலகம் செழிப்படைகின்றது. ஆதலின் நமது வாழ்வு செழிப்படைய அம்பிகை சிவபூசை செய்யும் தலங்கள் சிலவற்றைச் சிந்திக்கலாம்.

பலதலங்களில் அம்பிகை சிவபூசை செய்திருந்தாலும் அவள் காஞ்சிபுரத்தில் செய்த சிவ பூசையே சிறப்புப் பெறுகின்றது. காஞ்சியில் அம்பிகை சிவபூசை செய்ததைக் காஞ்சிப் புராணங்கள் விரிவாகக் கூறுகின்றன.

ஒருசமயம் உமாதேவியார் கயிலைமலை மீது வீற்றிருந்த சிவபெருமானின் கண்களை விளையாட்டாக மூடினாள். அவருடைய கண்கள் மூடப்பட்டதால் சூரியனும் சந்திரனும் தங்கள் ஒளியை இழந்தனர். உலகங்கள் இருளில் மூழ்கின. ஊழிக்காலம் தோன்றியே விட்டதோ என்று உலக உயிர்கள் பதை பதைத்து அஞ்சி நடுங்கிச் சோர்ந்து வீழ்ந்தன. அதனால் பெருமான் தனது மூன்றாவது கண்ணான நெற்றிக்கண்ணைத் திறந்தார். இதனால் உலகில் ஒளிபரவிய போதும் நெருப்பும், புகையும் எங்கும் பரவியது. உயிர்கள் மேலும் அஞ்சின. பார்வதியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சி தனது கைகளை எடுத்தாள். உலகில் சூரியனும் சந்திரனும் ஒளிபெற்றுப் பிரகாசித்தனர். பெருமான் நெற்றிக்கண்ணை மூடிக் கொண்டார். வெப்பமும் புகையும் குறைந்தன.

பார்வதி அதைக்கண்டு அஞ்சி அவரை வழிபட்டாள். அவர் அவளை நோக்கி “உயிர்களுக்கு இதத்தையும் நன்மையையும் செய்ய வேண்டிய நீ மாறாகத் துன்பத்தையும் அச்சத்தையும் உண்டாக்கினாய். இது நல்லதல்ல, இக்குற்றம் நீங்கும் பொருட்டுப் பூவுலகில் சென்று வழிபாடு செய்க” என்றார். அதைக் கேட்டுப் பார்வதி நடுங்கினாள். ஒருவாறு மனம் தெளிந்து சிவபெருமானிடம் விடை பெற்றுக் கொண்டு பூவுலகம் வந்தாள். முதலில் இமய மலைச்சாரலில் தவம் செய்தாள். பிறகு காசியை அடைந்தாள். அங்கு சிவபூசை செய்ததுடன் அன்னபூரணியாக வீற்றிருந்து அறம் செய்தாள். பிறகு பல தலங்களையும் தரிசனம் செய்து கொண்டு காஞ்சி மாநகரை அடைந்தாள். சிவபெருமான் அவ்விடத்தில் சிவபூசை செய்யுமாறு கூறினார். அம்பிகை காஞ்சியிலுள்ள அனேக சிவாலயங்களை ஆகம முறைப்படி அர்ச்சித்துப் போற்றினாள். சிவபூசையின் ஓர் அங்கம் அடியவர்களுக்கு அறம் செய்தலாகும். பார்வதி அதைச் செய்ய விரும்பினாள். சிவபெருமான் அவளிடம் இரண்டு நாழிகை நெல்லைக் கொடுத்து அறம் செய்யும்படி கூறினார். அவள் அதனைத் தனது ஆற்றலால் பெருக்கி உலகாணித் தீர்த்தக் கரையில் ஓர் அறச்சாலை அமைத்து அங்கு ஓயாது அறம் செய்தாள். (அவள் அங்கு அறம் செய்யும் அழகையும் சிறப்பையும் சிவபெருமானே அடியவர்போல் வந்து பார்த்து மகிழ்ந்தாராம். அப்படி வந்து கோயில் கொண்ட இடத்திற்கு “அறம் வளர்த்தீசுவரம்” என்று பெயர் வழங்குகின்றது.

அவள் அறம்செய்த இடம் **‘உலக அறவிக் கோட்டம்’** எனப்பட்டது. அதுவே இந்நாளில் காமாட்சியம்மன் கோயிலாகத் திகழ்கின்றது. பின்னும் பார்வதிதேவி சிறப்பான சிவபூசையொன்றை செய்யத் திருவுள்ளம் கொண்டாள் சிவபூசைக்காகக் காப்பு அணிந்தாள். அப்போது அவள் வழிபட்ட லிங்கம் காப்பீசர் என்று பெயர் பெற்றது. பிறகு கடகங்களை அணிந்தாள். அப்போது அவள் வழிபட்ட லிங்கம் கடகேசர் என்றும் கங்கணீசர் என்றும் பெயர் பெற்றன. பிறகு காஞ்சியின் மையத்தில் ஓடும் கம்பையாற்றின் கரையில் உள்ள காலம் கடந்து வேதமயமாக நிற்கும் மாமரத்தினை அடைந்து அதன்கீழ் வீற்றிருந்தாள். அங்கு மஞ்சள் காப்பணிந்து நீராடினாள். அவள் உடல்வாசத்தாலும் பக்தியாலும், அந்நீர் தனிநிறமும் மணமும் பெற்று ஓடியது. அதனால் அதற்கு மஞ்சளாறு எனப் பெயராயிற்று, அதனை விரும்பிய சிவபெருமான் அதன் நடுவினில் சிவலிங்கமாகத் தோன்றினார். பின்னர் அச்சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு ஆனந்தக் கூத்தாடினார். அதனால் அவருக்கு “மஞ்சள்நீர்க் கூத்தர்” என்பது பெயராயிற்று.

அம்பிகை வைராக்கியமான வெள்ளாடைகளை அணிந்தாள். உருத்திராக்கங்களையும் விபூதியையும் தரித்தாள் திலக மண்டலம் தீட்டிக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமித்து சிந்தைகொண்டு பஞ்சாட்சர ஜெபம் செய்தாள். பிறகு பூசைக்குரிய பொருட்களைத் திரட்டிக் கொண்டாள். கம்பையாற்றின் கரையில் மணலைக் கூட்டித்தன் அன்பையும் பக்தியையும் கலந்து சிவத்தை நெஞ்சில் தேக்கியவாறு அழகிய சிவலிங்கத்தைச் செய்தாள். அதற்கு மாலைகளையும் ஆபரணங்களையும் சூட்டினாள். ஆகமங்களில் கூறிய படி அதனை அர்ச்சித்தாள் அன்புடன் போற்றி வழிபட்டார். அவள் தன்னைப் பூசைசெய்யும் அழகையும் நேர்த்தியையும் காணச் சிவபெருமான் அங்கு மறைவாக வீற்றிருந்தார். அதனால் அவருக்குக் கள்ளக்கம்பர் என்பது பெயராயிற்று. (காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் கள்ளக் கம்பர் சந்நிதி தனியே உள்ளது.)

பலநாட்கள் நகர்ந்தன. அம்பிகை நாளுக்கு நாள் அன்புவளரச் சிவபூசை செய்தாள். அவளுடைய அன்பினைச் சோதிக்க விரும்பிய சிவபெருமான் அருகில் ஓடும் கம்பையாற்றைப் பெருகிவரச் செய்தார். அந்த வெள்ளம் ஊழிக்காலம் போல் பெருகி வந்தது. அதைக் கண்டு அஞ்சிய பார்வதிதேவி தான் பூஜை செய்த சிவலிங்கத்தைத் தாவி அணைத்துக் கொண்டாள். கண்களை மூடி ஐந்தெழுத்தை உன்னிச் சிவனைத் தியானித்தாள். வெள்ளம் மேலும் பெருகப் பெருக பார்வதி இன்னும் உறுதியுடன் சிவலிங்கத்தை அணைத்துக் கட்டித் தழுவிக் கொண்டாள். அவளுடைய அன்பினால் பெருமான் உருகினார். அவளுடைய மார்பு அழுந்திய சுவடும் கைவளையல் பதித்த சுவடும் அந்த லிங்கத்தில் பதிந்தன. அவற்றைப் பெருமான் அன்பின் அடையாளமாக ஏற்றார். அதனால் அவருக்குத் தழுவக் குழைந்த நாதர், வளைத்தழும்போடு முலைத்தழும்பும் கொண்டபிரான், கள்ளக் கம்பர் முதலிய பெயர்கள் உண்டாயின.

அவளுடைய தெய்வீக அணைப்பு சிவபெருமானுக்கு உவப்பை உண்டாக்கியது. அதனால் வெள்ளத்தைத் தணிவித்தார். அந்த லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அவளுக்குக் காட்சி தந்தார். அவரைக் கண்டு அவள் பணிந்து வணங்கினாள். அப்போது தேவர்கள் முனிவர்கள் உள்ளிட்ட எல்லோரும் அங்கு கூடினர். அவர்கள் சிவபெருமானிடம் தேவியை மணந்து தங்களுக்குத் திருமணக் காட்சியினை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். சிவபெருமானும் அப்படியே ஆகட்டும் என்றார்.

பிறகு ஒரு நல்ல நாளில் அனைவரும் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர். காஞ்சிபுரத்தைத் திருமண நகரமாக அலங்கரித்தனர். சிவபெருமான் கயிலையினின்று புறப்பட்டு வரும்போது பூத வெள்ளமும், தேவர்கள் கூட்டமும், கின்னர, கிரும்புருஷர், வித்தியாதரக் கூட்டமும் கூடிப் பரிவாரங்களாகத் தொடர்ந்து வர காஞ்சிபுரத்தில் மாமரத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த மணமேடையை அடைந்தார். அவரைத் திருமாலும் பிரமனும் எதிர்கொண்டு அழைத்துச் சென்று மணமேடையில் அமர்த்தினர். லட்சுமி, சரஸ்வதி முதலிய தெய்வப் பெண்கள் பார்வதியை அழைத்து வந்து அவருக்கு வலப்பாகத்தில் அமர்த்தினார். பிரமன் திருமண வேள்வியைச் செய்தான். திருமால் நீர்வார்த்துக் கன்னிகாதானம் செய்தார். முனிவர்கள் வாழ்த்துக்களைக் கூற அரம்பையர்கள் மங்கலங்களைக் கூறி ஆடிப் பாடினர். எங்கும் மகிழ்ச்சி பரவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஞ்சிபுரத்தில் அம்பிகை பூசித்த லிங்கமே, ஏகாம்பரநாதர் ஆலயத்தில் மூலவராக எழுந்தருளியுள்ளது. அது மண்ணால் அணிவிக்கப்பட்டுள்ளது. புனுகுசட்டம் மட்டுமே சாத்தப்படுகிறது.

இது காலங்கடந்த கதையாதலின் எல்லோராலும் நெடுங்காலமாகச் சொல்லப்பட்டு வருகின்றது. அதனால் இது ஒரு மாதிரியாக இல்லாமல் கூடியும் குறைவுமாக விரித்தும் சுருக்கியும் சொல்லப்பட்டுள்ளது. காஞ்சிப் புராணங்கள் உமாதேவியார் சிவனின் கண்களைப் புதைத்தல், சிவனிடம் விடை பெறுதல், பூவுலகிற்கு வருதல், காஞ்சியில் சிவபூசை செய்தல், வெள்ளம் பெருகி வருதல், உமாதேவியார் சிவலிங்கத்தைத் தாவி அணைத்துக் கொள்ளுதல், சிவன் வெளிப்பட்டு அருளுதல், பின்னர் திருமணம் நடைபெறுதல் ஆகியவற்றை விரிவாகக் கூறுகின்றன. காஞ்சிபுரத்திலுள்ள எல்லா ஆலயங்களிலும் உமை சிவலிங்கத்தைத் தாவி அணைத்துக் கொண்டுள்ள சிற்பத்தை அமைத்துள்ளனர். காஞ்சிபுரத்தில் மட்டுமன்றி தென்னகமெங்கும் உள்ள ஆலயங்களில் தூண் சிற்பமாகவும் இக்காட்சி அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

உன்னதமான இக்கதையை விளக்கும் வகையில் பலதலங்களில் தழுவக் குழைந்தநாதர் சந்நிதி அமைக்கப்பட்டிருந்தாலும் அறியாமல் பலர் இப்பெயரை போட்டுக் குழப்பியுள்ளனர். சிலர் இவரைக் குழந்தை ஈசுவரர் என்றும், கொழுந்தீசர் என்றும் எழுதி வைத்துள்ளனர்.

நன்றி- சிவமஞ்சரி

## அதிபத்த நாயனார்.

சோழநாட்டில் நாக பட்டினத்தில் நுழைப்பாடியில் வலைஞர் குலத்திற் பிறந்தவர் அதிபத்த நாயனார். பரதவர்களின் தலைவராகிய நாயனார் சிவபக்தியிற் சிறந்தவர். வலையிற் படுகின்ற மீன்களுள் ஒரு நல்ல மீனை சிவபெருமானுக்கு என்று விட்டுவிட்டார். ஒரேயொரு மீன் கிடைத்தாலும் அதனைச் சிவனுக்காக விட்டுவிட்டார். சிவன் திருவருளால் தொடர்ந்து பல நாள்களாக ஒவ்வொருமீனே கிடைப்பதைக் கடலிலே விட்டுவிடுவார். அவர் செல்வம் சுருங்கியது. உணவில்லை. அவருடலமும் மெலிந்தது. பத்தியில் தலைநின்றார்.

ஒருநாள் வலையிற் பொன்மீன் ஒன்று அகப்பட்டது. அதனையும் சிவபெருமானுக்கு ஆக என்று கடலில் விட்டார். அப்பொழுது சிவன் அவருக்குக் காட்சி கொடுத்துத் தம்முடன் சேர்த்துக் கொண்டார்.

இவர் முத்தியடைந்த திருநாள் **ஆவணி ஆயிலியம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானமும் மஹோற்சவமும்

**சர்மிளா இராஜராஜேஸ்வரன்,**
4ம் வருடம் (சமூகவியல் சிறப்புக்கலை),
கிழக்குப் பல்கலைக்கழகம்.

இந்து மதத்தில் அம்மன் வழிபாடு மிகப்பழைய காலந்தொட்டே நடைபெற்று வருகிறது. இதற்குப் புதைபொருளாய்வுகளும் சரித்திர வரலாறுகளும் சமய தத்துவங்களும் ஆதாரமாகின்றன. 20ம் நூற்றாண்டின் சிந்துவெளி புதைபொருள் ஆராய்சியின் மூலம் சக்தி வழிபாட்டின் தொன்மையை அறியமுடிகிறது. ஹரப்பா நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட கருவுயிர்க்கும் இலட்சினை சக்தி வழிபாட்டினைக் குறிப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தேவியின் பல அவதாரங்களில் உக்கிரமும் கருணையும் கொண்டதாகத் திகழ்வது "துர்க்கா ரூபம்" என்கிறது புராணம். துர்க்கை எப்போதுமே ஆக்ரோஷநாயகிதான். அதேசமயம் தீயவர்களிடம் மட்டுமே தன்கோபத்தை வெளிப்படுத்துவதுடன் தன்னைச் சரணடையும் பக்தர்களுக்கு எப்போதும் அரணாகத் திகழ்ந்து அருள்புரிவார். துர்க்கை என்னும் சொல்லுக்கு வடமொழியில் "வெல்ல முடியாதவள்" என்றும் தமிழ்மொழியில் "வெற்றிக்கு உரியவள்" என்றும் பொருள்படுகின்றது. யாழ்ப்பாணத்தின் வடபால் காங்கேசந்துறைப் பெருந்தெருவழியே எட்டாவது மைல்கல் தொலைவில் அமைந்திருக்கும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் 350 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்தது. துர்க்கை அம்பாளை மூலமூர்த்தியாகக் கொண்ட தனிப்பெருங்கோயிலாக இலுபைமர நிழலில் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய நாற்திசைக் கோபுரங்கள் சூழ அமையப்பெற்றுள்ளது. அம்பாளின் எழில்மிகு தோற்றத்தைக்காண அன்றாடம் ஆலயத்திற்குக் கூடும் அடியவர்கள் ஏராளம்.

ஆலய வரலாற்றை நோக்கும்போது தெல்லிப்பழை, உழுகுடைப்பதி வவுணாவத்தையில் சைவ மரபில் வந்த சைவப்பெரியார் கதிர்காமர். இவர் இருபாலும் சிறந்த சைவக்குடியில் தோன்றியவர். 1750ம் ஆண்டளவில் இந்தியாவிற்கு தலயாத்திரை சென்று 1760ல் யாழ்ப்பாணம் திரும்பியபோது 64 சக்திபீடங்களில் ஒன்றான காசியிலுள்ள சொப்பனேஸ்வரி பீடத்திலிருந்து துர்க்காதேவி இயந்திரமொன்றையும், வெண்கலத்தினாலமைந்த திருமுகக் கெண்டி உருவமொன்றையும் கொண்டு வந்து, கீரிமலையில் புண்ணியத் தீர்த்தமாடி வரும் வழியில் மூன்று மைல் தொலைவில் இலுப்பமரச் சோலையில் இளைப்பாறிய போது, திருவருட் கருணையால் அம்பாள் அவர்முன் தோன்றி துர்க்கா சக்கரத்தை அங்கே தாபிக்குமாறு ஆணை பிறப்பித்து மறைந்தார். இவ்வாறே ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் அமையப்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவின் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தைச்சூழ பெருங் கோபுரங்களைக் காண்பது போன்று தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானமும் விளங்க வேண்டும் என்பதற்காக ஆலயத்தின் நாற்திசையும் கோபுரங்கள் ஒரேயளவு உயர அளவுடையதாக (61அடிஉயரம்) நிர்மாணிக்கப்பட்டுள்ளது. முதன் முதலில் 1980ம் ஆண்டு கிழக்கு திசை நோக்கியதாக கோபுரம் அமைக்கப்பட்டது. 2016.01.24ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகதி தெற்குவாசல் கோபுரத்திற்கு (பஞ்சதள கோபுரம்) அடிக்கல் நாட்டப்பட்டு 2017.02.09ம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் 2017.06.30ம் திகதி குபேரவாசல் (வடதிசைவாசல்) கோபுரத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு 2018.01.28ம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2018.03.30ம் திகதி மேற்குவாசல் கோபுரம் அத்திவாரம் இடப்பட்டு 2019.01.30ம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2021.04.04ம் திகதி கிழக்குத் திசையில் தலைவாசற் கோபுரத்திருப்பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டு அம்பாளின் திருவருளால் சிறப்பாக நடைபெற்ற வண்ணம் உள்ளது.

ஆலயங்களில் மிகச்சிறப்பாகப் பூசைகள் நடத்தி அங்குள்ள மூர்த்திகளின் திருவுருவங்களை பலவித வாகனங்களின் மேல் எழுந்தருளச் செய்து நடைபெறும் விழாவை, திருவிழா அல்லது மஹோற்சவம் என அழைப்பர். கொடித்தம்பம் நிறுவிய ஆலயங்களில் வருடத்திற்கு ஒரு முறை மஹோற்சவம் நடைபெறுகின்றது. மஹோற்சவத்தில் "மஹா" என்பது "மேலானது" என்றும் "உற்சவம்" என்பது "உத்தமயாகம்" என்றும் பொருள்படும். மஹோற்சவம் ஆன்மாக்களை உய்விக்கும் பொருட்டு செய்யப்படும் ஐந்தொழில்களைக் குறித்து நிற்கின்றது.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பெறுவது 1968ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மஹோற்சவமாகும். ஆவணி மாத பூர்வபட்சத்தில் வரும் பூர நட்சத்திரத்தில் ஆரம்பமாகி திருவோண நட்சத்திரத்தில் தீர்த்த திருவிழாவோடு சிறப்பாக நிறைவு பெறும். பன்னிரெண்டு தினங்களில் நடைபெறும் மஹோற்சவ காலத்தில் பெருந்தொகையான பக்தர்கள் வருகை தருவதும் விரத அனுட்டானங்களில் ஈடுபடுவதும் வழமையாகும். மஹோற்சவ காலம் 1981ஆம் ஆண்டு தொடக்கம் அரசாங்கத்தில் பிரகடனப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இம் மஹோற்சவத்தில் கொடியேற்றம், கொடியிறக்கம் என்பன பொதுமக்களின் பொது உபயமாக இடம்பெறுவது சிறப்பிற்குரிய விடயமாகும். ஏனைய மஹோற்சவ உபயங்கள் தனி உபயங்களாக நடைபெற்று வருகின்றன. மஹோற்சவத்துடன் தொடர்புடைய கிரியைகள் என்ற அடிப்படையில் கொடியேற்றத்திற்கு முன் ஆலயத்தில் கிரியைகள் இடம் பெறுகின்றது.

1968ம் ஆண்டு முதல் மஹோற்சவத்தின் முதலாம் நாள் நிகழ்வான கொடியேற்றம் பொது உபயமாக நடைபெற்று வருகின்றது. இதற்கு உலகெங்கிலுமுள்ள அம்பாள் அடியவர்கள் தமது பங்களிப்பை வழங்கி வருகிறார்கள். பொது உபயத்தினைச் சிறப்பிக்க சிறந்த அந்தணர் பெருமக்களும், மங்கல இசைவாத்தியக் கலைஞர்களும் வருகை தருகிறார்கள். திருவிழாவிற்கு வரும் அடியார்களை உயர்பதம் அடையச் செய்வதற்காக அம்பாள் இவ்விழா நாட்களில் எழுந்தருளி அருள்பாலிக்கிறார்.

3ம் திருவிழா திருமுறைத் திருவிழா எனபதாகும். அதாவது பக்தர்களாகிய நாயன்மார்கள் திருவுருங்கள் அம்பாளை பார்த்தவாறு திருவீதியுலா வருவதாகும். அவ்வேளை அடியவர்களால் திருமுறைகள் இசைக்கப்படும். 5ம் நாள் தங்கரதத் திருவிழா இடம்பெறும். அம்பாளுக்கான தங்கரதத்தை உருவாக்க அங்குரார்ப்பண நிகழ்வு 2017.09.02ம் திகதி நடைபெற்று, அம்பாளின் அருளால் தங்கரதம் உருவாக்கப்பட்டு 2019.09.02ம் திகதி வெள்ளோட்டம் நடைபெற்றது. 6ம் நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமஞ்சத் திருவிழா சிறப்பாக நடைபெற்றுவருவதுடன் மஞ்சத்தில் மின்குமிழின் பிரகாசத்தில் மாலை வேளையில் அம்பாள் வீதியுலா வரும் காட்சியைக்காண பக்தர்களின் உள்ளமும் பக்தி வெள்ளத்தில் பரவசமடையும்.

9ம் நாள் திருவிழா "வேட்டைத் திருவிழா" அல்லது "மிருகயாத்திரை" எனப்படும். அதாவது அம்பாள் ஆன்மாவிலுள்ள மிருகக்குணங்களை அழிப்பதை உணர்த்துவதாக அமைந்தள்ளது. ஆலயத்தின் வெளிவீதியில் தென்மேற்கு மூலையில் வாழைநட்டு பல்வேறு காய்கனிகள் தூக்கி அமைக்கப்பட்ட பகுதியில் அம்பாளுடைய வேட்டைத் திருவிழா பக்தி பூர்வமாக நடைபெறுகிறது. இத் தருணத்தில் துர்க்கை அம்பாள் சிவப்புநிற ஆடை அணிந்து வீராவேசத்துடன் கையிலே வில்லும் அம்பும் ஏந்திச் செல்கின்ற காட்சி பக்திமிக்க காட்சியாகும். வாழை வெட்டல் நிகழ்ச்சி நிறைவடைந்தவுடன் அம்பாள் மேற்கு வீதியிலுள்ள இளைப்பாறு மண்டபத்துக்கு எழுந்தருளி காட்சி வழங்குவதுடன் இந் நேரத்தில் விஷேட பூசை இடம்பெற்று அம்பாள் தனது இருப்பிடத்திற்கு எழுந்தருளி இந் நாளில் மதியவேளையில் பொம்மலாட்ட நிகழ்வும் நடைபெறுவதனால் மகிழ்வான திருவிழாவாக அமைகிறது. பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து மாலைத் திருவிழா ஆரம்பமாகும்.

9ஆம் நாள் உற்சவம் ஆவணி மூலப் பெருநாளில் அமைவது வழக்கமாதலால் அம்பாள் மாலைத் திருவிழாவில் சிவலிங்கத்தோடு எழுந்தருளி அருள்பாலிக்கிறார். மாலைத் திருவிழாவில் கைலாசவாகனத்தில் சிவலிங்கத்தோடு எழுந்தருளும் காட்சி "ஆணவம் நிறைந்த உயிரும் இறுதியில் ஆணவத்தை இழந்து கடவுளைத் தியானித்து வரம்பெற்று கடவுள் திருவடி சார்ந்து. இன்புறுகிறது" என்பதை உணரச் செய்கிறது. எனவே இம் மகோற்சவ நாள் அம்பாள் ஆணவத்தை நீக்கி அடியவர்களுக்கு வரங்களை வாரிவழங்குகிறார் என்பதை உணர்த்துகிறது.

1983ம் ஆண்டிலிருந்து இங்கு மஹோற்சவத்தின் 10ம் நாள் சப்பறத் திருவிழா இடம்பெறுகிறது. 1983ம் ஆண்டு தொடக்கம் புதிய சப்பறத்தில் பொலிவுடன் அம்பாள் எழுந்தருளுகிறார். மாலையில் இடம்பெறும் இச்சப்பறத் திருவிழாவைக் காண அடியார்கள் குழுமுவதுடன் சப்பறத்துடன் கற்பூரச்சட்டியை ஏந்தியவாறு பெண் அடியார்கள் வலம் வந்து தங்கள் நேர்த்திகளைச் சப்பறம் இருப்பிற்கு வந்தவுடன் நிறைவு செய்வது வழக்கமாகக் காணப்படுகின்றது. 10ம் நாள் மஹோற்சவத்தில் காலை வேளையில் பட்டுக்குடைத் திருவிழா இடம்பெறுகிறது. பக்தர்கள் அம்பாளின் பலவர்ணக் குடைகளை தாங்கியவாறு முன்செல்ல எழில்மிகுத் தோற்றத்தோடு அம்பாள் வரும் காட்சி கண்குளிரச் செய்கின்றது.

தேர் அக்கினிச் சுடரின் வடிவத்தைக் கொண்டதுடன் அழித்தலைக் குறித்து நிற்கின்றது. 1978ம் ஆண்டுக்கு முன்பு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் மஹோற்சவத்தில் 11ம் நாள் தேர்த்திருவிழா கட்டுத்தேரில் அலங்காரம் செய்து ஆவணி உத்தராட தினத்தில் நடைபெற்று வந்தது. 1978ம் ஆண்டு சித்திரத் தேரில் அம்பாளின் பவனியைக் காணுகின்ற பாக்கியம் அம்பாள் அடியவர்களுக்குக் கிடைத்தது. இத்தினத்தில் ஏராளமான அடியவர்கள் வருகை தருவதும். ஊடகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்த்திருவிழாவை நேரடி ஒளிபரப்புச் செய்தும் பிரதிட்டை, காவடி எடுத்தல், அடியடித்தல் போன்ற நேர்த்திகளில் ஆயிரத்திற்கு மேற்பட்ட அடியார்கள் நிகழ்த்தியும் வருகின்றமை வழமையான செயற்பாடாகும். தேர்திருவிழாவின் போது ஆலயத்தில் விசேட பூசைகள், கிரியைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அலங்கரிக்கப்பட்ட தேரில் துர்க்கை அம்பாள் அடியார்கள் சூழ வீதிவலம் வந்து அடியவர்களுக்கு அருள் சுரந்திடுவார். வீதிவலம் எழுந்தருளிய பின் தேர் முட்டியில் இளைப்பாறி பச்சைசாத்தி நவசக்தி அர்ச்சனை நடைபெறுவதும் பின்னர் தமது அமர்விடம் நோக்கி அம்பாள் எழுந்தருகிறார். அதன் பின்னர் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறும். ஈழத்திலுள்ள பிரபல மங்கல வாத்தியக் கலைஞர்கள், இசைக்கலைஞர்கள் கூட்டு வழிபாட்டுக் குழுவினர்கள் இவ்விழாவில் பங்குகொள்வதும் அற்புதமான நிகழ்வாகும்.

தீர்த்தோற்சவ விழாவானது ஆன்மாக்கள் தமது எல்லையில்லா கருணை வெள்ளத்தில் மூழ்கி இன்பநிலை எய்த வேண்டும் என்ற நோக்கில் நடைபெறுகிறது. இந் நாளில் கொடியிறக்கம், சூர்ணோற்சவம், ஆசாரிய உற்சவம், சண்டேஸ்வர உற்சவம் என்பன இடம் பெறுவதுடன் அன்றைய தினம் அம்பாளுக்கு திருவூஞ்சல் நடைபெற்று கொடிதம்பத்தில் ஏற்றிய கொடி இறக்கப்படும். பின்னர் வெளிவீதியுலா இடம்பெற்று திருக்குபாலகர்களுக்கு நன்றி கூறி அவர்களுக்குரிய இடங்களுக்கு அனுப்புதல் இடம்பெறும். அவ்வேளை வேதம் ஓதுதல், திருமுறைப் பாராயணம் செய்தல், மங்கலவாத்தியங்கள் இசைத்தல் இடம்பெற்று பின்னர் அடியார்கள் எல்லோரும் அம்பாளை நினைத்து மௌனமாக வருவார்கள். பின் ஈசானத்தில் மீண்டும் எல்லா வாத்தியங்களும் ஒலிக்கப்படும்.

அம்பாளுக்கு படைத்த பிரசாதம் அணிந்த மாலை என்பவற்றை சண்டேஸ்வரிக்கு சமர்ப்பித்து சண்டேஸ்வரி தனியே உள்வீதி வலம்வரச் செய்து பின்னர் வெளிவீதி வலம்வரச் செய்து அவ்வேளை சிதறு தேங்காய் உடைத்து மஹோற்சவ பலனைக் கேட்டு அம்பாள் அடியவர்கள் வணங்குவர் பின் ஆசாரியார் உற்சவம் இடம்பெறும் ஆண்டு தோறும் ஆவணித் திருவோணத்தில் நடைபெறும் திருவிழா இதுவாகும். ஆரம்பத்தில் திருமஞ்சனக் கிணற்றில் நடைபெற்றுவந்த தீர்த்த உற்சவத்தை 1982ஆம் ஆண்டு முதல் புதிதாக அமைக்கப்பட்ட துர்க்கா புஷ்கரணி தீர்த்தத் தடாகத்தில் நடத்துவதற்கு அம்பாள் திருவருள் நிறையபெற்றது. தீர்த்த மண்டபத்தில் வெண்மை உடுத்தி அம்பாள் எழுந்தருளச் செய்து பக்திமயமாக அடியார்கள் தீர்த்தக்கேணி படிகளைச் சூழ்ந்து அமர்ந்து அம்பாளின் திருக்கோலத்தை கண்குளிர கண்டு மகிழ்வடைகிறார்கள். பின்னர் அடியவர்களுக்கு தீர்த்தம் தெளித்தும் பருகுவதற்கும் அந்தணர்கள் வழங்குகிறார்கள். 13ம் நாள் பிராயச்சித்த அபிஷேகம் காலையில் இடம்பெறுவதுடன் மாலையில் வைரவர் பொங்கலும் நடைபெறுகிறது.

துர்க்காதேவி அன்னபூரணியாக மஹோற்சவ காலங்களிலும் செவ்வாய் விஷேட தினங்களிலும் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கி வருகிறார். திருவிழாக் காலங்களில் தனி உபயமாகவும் கூட்டு உபயமாகவும் அன்னதானப் பணி நடைபெறுகிறது. வர்த்தக பெருமக்களும் அம்பாள் அடியார்களும் இப்பணியை வரவேற்றும் பொருளாகவும், பணமாகவும் உதவி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் காலத்தில் கொழும்பு இராமகிருஸ்ண மிஷனால் வழங்கப்பட்ட 150 கிலோ அரிசியை கொள்ளக்கூடிய பானை பயன்படுத்தப்படுகின்றது. மகோற்சவத்தின் கொடியேற்றம், தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழாவின் போதே அதிகளவான அடியார்கள் அன்னதான நிகழ்வில் கலந்து சிறப்பிக்கிறார்கள். இக் காலத்தில் ஆலய வீதியில் தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கப்பட்டு பக்தர்களின் தாகசாந்தி நிவர்த்தி செய்யப்படுகிறது.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் பல்வேறு சமூகப்பணிகளை சமுதாய மட்டத்தில் இன்றுவரை சிறப்பாக முன்னெடுத்து வருவதுடன் ஆலயங்கலெல்லாம் அறச்சாலைகளாக அமைய வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக திகழ்ந்து வருகின்றது. பட்டர் தனது அபிராமி அந்தாதியில் தேவி வழிபாட்டில் ஈடுபடுவதனால் அடையும் பேறுகளைக் குறிப்பிடுகையில்,

**'சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்**
**புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்**
**அல்லும் பகலும் தொழுவார்க் கேஅழி யாஅரசும்**
**சொல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே'**

(அபிராமி அந்தாதி)

எனவே துர்க்காதேவியைச் சரணடைந்தவர்கள் துன்பம் நீங்கி இன்புற்று வாழ்வார்கள் என்பது நம்பிக்கையும் நிதர்சனமுமாகும். மெய்யன்போடு அம்பாளை வணங்கி அனுகிரகத்தைப் பெறுவோம்.

"ஓம் துர்க்கா சரணம்"

**சிவபூசை**

சிவலிங்க பூசையிலே செய்யப்படும் கிரியைகள் ஒவ்வொன்றும் ஞானார்த்தம் உடையன.

புஷ்பம் - மோக்ஷவின்பத்தை அடைதற்கு அறிகுறியாம்.
திருமஞ்சனம் - ஆன்மாவின் மலத்தைச் சுத்தி செய்தற்கு அறிகுறியாம்.
தூபம் - அஞ்ஞானவாசனையை நீக்குதற்கு அறிகுறியாம்.
தீபம் - அஞ்ஞானம் நீங்கியவிடத்து விளங்கும் ஞானத்திற்கு அறிகுறியாம்.
நைவேத்திய உபசாரம் - தற்போதம் நீங்குதற்கு அறிகுறியாம்.
கர்ப்பூர தீபம் சமர்ப்பித்தல் - ஆன்மா சிவத்துடன் அத்துவித நிலையடைதல்.
இவ்வுண்மை

**'தீதணையாக் கர்ப்பூர தீபமென நான்கண்ட**
**சோதியுட னொன்றித் துரிசறுவ தெந்நாளோ.'**

என்னும் திரு தாயுமான சுவாமிகள் திருவாக்கால் உணரப்படும். இப்படியே ஒவ்வொரு கிரியைகளும் ஆன்மாக்கள் பொருட்டே வைக்கப்பட்டனவாம்.

**'குரு லிங்க சங்கமம்' என்னும் தலைப்பில் சிவஸ்ரீ கு. வைத்தீஸ்வரக் குருக்கள் வரைந்த கட்டுரையின் ஒரு பகுதி...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியம்

திருமதி. பாகீரதி கணேசதுரை,
ஓய்வு நிலை ஆசிரியர்,

மனிதனாகப் பிறந்த எல்லோருக்கும் ஆரோக்கியம் என்பது மிகவும் அத்தியாவசியமானது. ஆரோக்கியம் உடல், உள, சமூக, ஆன்மிகம் ஆகிய நான்கும் நன்னிலையில் இருதலைக்குறிக்கும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் வரைவிலக்கணம் கொடுத்துள்ளது. பொதுவாக ஒருவரின் புறத்தோற்றத்தை மட்டுமே நாம் பார்க்கமுடிகின்றது. அதனை வைத்தே அந்த நபர் ஆரோக்கியமாயுள்ளார் என்று நாம் கருதி விடுகின்றோம். சிலவேளைகளில் முகத்தில் மலர்ச்சி, செழிப்பு இருந்தாலும் நல்ல ஆரோக்கியவான் என்று கருதி விடுவதும் உண்டு. அவரது நடத்தைப் பாங்கை நாம் உற்று அவதானிக்கும் போது தான் அவர் ஒரு நல்ல மனிதர் என்று முடிவுகட்டி விடுகிறோம். இடையிடையே முகில் மூட்டம் வந்து போவது போல் முகத்தில் உணர்வலைகள் வந்து கணத்திற்குக் கணம் மாறிக்கொண்டே இருக்கும். நிலையாக கோபமோ அமைதியோ ஒருவர் முகத்தில் எப்போதும் குடியிருப்பதில்லை. தெளிந்த வானம், தெளிந்த நீரோடை என்றெல்லாம் பேசிப் பார்த்திருக்கிறோம். முகம் ஒன்றுமட்டும் இப்படியான மாற்றங்களைக் காட்டிக் கொண்டிருக்கும். எது எப்படி இருப்பினும் ஆரோக்கியத்தின் நான்கு கூறுகளையும் நாம் சற்று ஆழமாகப் பார்க்கும் போது தான் முழுமையாக எம்மால் உணரமுடியும்.

முதலில் உடல் ஆரோக்கியம் என்று கூறும்போது நோயற்ற உடல் என்றும், அங்கங்கள் சுறுசுறுப்பாக நன்கு இயங்கிக் கொண்டிருப்பதையும் நாம் சுகதேகி என்று கூறுகின்றோம். அங்கவீனர்கள் ஆரோக்கியம் குறைந்தவர்கள் என்று ஒருபோதும் முடிவு கட்டி விடமுடியாது இருக்கின்ற அங்கங்கள் நோயற்று இருந்தாலே போதும் நோயற்ற உடலைப் பேணிப் பாதுகாத்து போஷாக்கான உணவுகள், உடற்பயிற்சிகள், ஆரோக்கியமான நாளாந்த வாழ்க்கைமுறை என்பவற்றைப் பின்பற்றும் ஒழுங்கு உடல் ஆரோக்கியத்தை நன்னிலையில் வைத்திருக்க உதவும் போதிய காற்று, நன்னீர் என்பவற்றைக் குறையின்றி வழங்கிக் கொள்ளுவதும், தவறான தீய பழக்கங்களைத் தவிர்த்துக் கொள்வதுவும் அவசியம் போதைப் பாவனை, புகைத்தல், தப்பான உறவுகள், தீயநண்பர்களின் சேர்க்கை நடத்தைப் பிறழ்வான செயல்கள் என்பவற்றை முற்றாகத் தவிர்த்துக் கொள்வதன் மூலம் உடல் ஆரோக்கியத்தை நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்னும் வாக்கிற்கேற்பப்பேணிப் பாதுகாத்து நன்னிலையில் வைத்துக் கொள்ள முடியும்.

அடுத்து உள ஆரோக்கியம் பற்றி நோக்குவோமானால் மனம் அமைதியாக இருக்கும் நிலையை, தன்னம்பிக்கையீனம், தாழ்வுச்சிக்கல், பதட்டம், படபடப்பு, விரக்தி, கோபம், சோகம், அர்த்தமற்றபயம், அதீதசெயற்பாடுகள் என்பன முற்றாகக் குழப்பி மனஅமைதிக்குக் குந்தகம் விளைவித்துவிடும் ஓய்வும் நல்ல தூக்கமும் கூட அவசியமானவையே. உளச்சமநிலையை எப்பொழுதும் கவனத்தில் கொள்ளல் அவசியம். உணர்வுகள், அறிவியல் இரண்டும் சமமாக இயங்கும் போது ஒருஅற்புதமான சமநிலை ஆளுமை தோன்றிவிடும். கற்றல் செயற்பாடுகள், அறிவைச் செம்மைப்படுத்த கலைச் செயற்பாடுகள் உணர்வைச் செழுமைப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள ஆரோக்கியத்தைப் பேணி நிற்கும். ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு கலையைப் பயில்வதோடு ஏனைய சில அழகியல் கலைகளை இரசிக்கும் பண்பை ஏற்படுத்திக் கொண்டால் இறுகிய உள்ளம் தளர்ந்து இலேசாகிவிடும். உடலைச் செம்மைப்படுத்த மூச்சுப்பயிற்சிகள் யோகா என்பனவும் உணர்வைச் செழுமைப்படுத்த தியானம், இசை, நடனம் என்பன உள ஆரோக்கியத்தைப் பேணிநிற்கும். உடல் ஆரோக்கியம் குன்றும்போது உளமும், உள ஆரோக்கியம் குன்றும் போது உடலும் நோய் நிலைக்குட்பட்டுவிடும் என்பது குறிப்பிடத்தக்கவிடயம். எனவே ஒன்றையொன்று போஷித்து வளம்படுத்த நாம் தான் வழிவகுக்கவேண்டும்.

அடுத்து சமூக ஆரோக்கியத்தை நோக்கும் போது மனிதன் என்பவன் ஒரு சமூகப்பிரஜையாக இருப்பதால் சமூகவரன் முறைகள், கட்டுக்கோப்பு, இணக்கப்பாடுகள், உறவாடல்கள், தொடர்பாடல்கள், பெரியோரை மதித்தல், நல்ல மனிதர்சகவாசம், சமூகப்பிரஜை, அயலவர் உறவு, மனிதாபிமானம் போன்ற பல விடயங்கள் இதில் இணைந்திருப்பதைக் காணலாம். ஒருவருக்கொருவர் முகமலர்ந்து வரவு கூறுதல், நலம் விசாரித்தல் நோய்நிலையில், நல்ல நிகழ்வுகளில், துயர நிகழ்வுகளில் பங்கு கொண்டு செயற்படுவதன் மூலம் முரண்பாடுகளைத் தவிர்த்து நல்லுறவைப் பேணிக் கொள்ளமுடியும். அகமுரண் புறமுரண் ஒவ்வாமைகளிலிருந்து விடுபட்டு சகஜமான உறவைப்பகிர்ந்து கொள்ள வேண்டும். மனக்கசப்புக்களை சிறிய கோபங்களை வளரவிடாது முளையிலேயே அகற்றி விட வேண்டும். அழகான ஒரு சிறிய புன்னகையோடு மனம் விட்டுப் பேசிப் பழகுவதன் மூலம் அயலாருடன் நல்லுறவைப் பேணும் மனிதன் சமூக ஆரோக்கியத்தில் நன்னிலையில் நிற்பதை அவதானிக்கலாம்.

அடுத்து ஆன்மிக ஆரோக்கியம் பற்றிநோக்குமிடத்து இறைசிந்தனை, மனச்சாட்சிக்கு மதிப்பளித்தல், உண்மை, நேர்மை, ஆத்மவிசுவாசம் என்பன உள்ளடங்கி நிற்பதைக் காணமுடியும். இறைவனின் இருப்பு தொடர்பான நம்பிக்கை இழக்கும் போது ஏமாற்றம் விரக்தி உயிர் வாழ்தலில் பற்றின்மை என்பன ஏற்பட வாய்ப்புண்டு. இதனால் வாழ்க்கையில் எதிலும் அதிகபற்றும் ஈடுபாடும் கொள்ள முடியாத தளம்பல் ஏற்பட்டுவிடும். இறைவன் இருக்கின்றான். என்று நம்பும் ஆஸ்திகளை விட நாஸ்திகன் தான் இறைவனை அதிகம் நினைக்கிறான். ஆதாவது பற்றினால் அல்ல வெறுப்பினால் குடும்பத்தில் உள்ளவர்கள் தெய்வவழிபாட்டை வீடுகளிலேயே ஆரம்பிக்கவேண்டும். பக்திநெறி ஆரோக்கியமாக அமைய வேண்டுமே தவிர மூடத்தனமான, பயமூட்டக்கூடிய விதத்தில் அமையக்கூடாது. ஆலயங்களுக்குச் செல்லும் போது பிள்ளைகளையும் அதற்குப்பழக்க வேண்டுவதனால் இறைநம்பிக்கை ஏற்படும்போது பிறரைத்துன்புறுத்தல், பாவகாரியங்களில் ஈடுபடுதல் என்பன மறைந்து நல்லமனப்பாங்கும் நன்னடத்தையும் இணைந்து ஆன்மிக ஆரோக்கிய நன்னிலை ஏற்படுவதை வளர்க்க முடியும்.

மொத்தத்தில் ஆரோக்கியத்தில் நான்கு கூறுகளும் இயலுமானவரை நன்னிலையில் வைத்துக் கொள்ள முயற்சி செய்வதன் மூலம் ஒரு நல்ல மனிதனாக, மண்பயனுற வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து ஏனையோருக்கு உதவிகள் புரியும் மனிதநேயப் பண்பாளனாக மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்பது உறுதியாகின்றது. வாழ்க்கை ஒரு அற்புதமான நந்தவனம் அதில் மலர்ந்து மணம் வீசி வாழவேண்டும். அதை வாழ்ந்து பார்ப்பதற்கும் ஒரு மனம் வேண்டும் என்று கூறி விடைபெறுகின்றேன். நன்றி வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகி வரும் தமிழர் இசைக்கருவிகள் - பகுதி 5 - திருச்சின்னம்


சரவண பிரபு ராமமூர்த்தி,
புதுச்சேரி, இந்தியா.





அனசு, உலவுடன் கூடிய இரண்டு நீளமான பித்தளைக் குழல்களுடைய இசைக்கருவி திருச்சின்னம். சுமார் 2½ அடி நீளம் இருக்கும். சில இடங்களில் வெள்ளியாலான திருச்சின்னம் உள்ளது. இரட்டையாகவே இக்கருவி தயாரித்து விற்கப்படும். 23 கேஜ் (Gauge) கனமுள்ள தகட்டினால் செய்யப்படும். இதுவே ஊத சற்று இலகுவாக இருக்கும். ஆணும் பெண்ணும் சேர்ந்த ஜோடி இசைக்கருவி என்பார்கள் இதை. வடமொழியில் இதை காஹளம்-காஹளீ என்பார்கள்.

இது வரை நாம் பார்த்த எக்காளம், கொம்பு, தாரை, திருச்சின்னம் மற்றும் நமரி கிராமிய கோவில் திருவிழாக்களும் இதற்கு ஐந்திசை ஊதுகருவிகள் எனப்படும். கேரள செண்டை மேளம் பஞ்ச வாத்தியம் பின்னால் சென்று நமது நிகழ்வுகளுக்கு அழைப்பதை தவிர்த்து நமது கிராமிய ஐந்திசை கருவிகளை ஆதரிக்க வேண்டிய நேரமிது. இதனால் இக்கலைகளை அழியாமல் நாம் பாதுகாக்கலாம். கேரள செண்டை மேளத்தை தமிழ்நாட்டின் சில மாவட்டங்களில் சீர் முறைகளில் ஒரு அங்கமாகவே மாற்றி வைத்துள்ளார்கள் தமிழக பணக்காரர்கள். விதிவிலக்கு அல்ல. இப்படி இருந்தால் நமது கலைஞர்கள் பிழைப்பது எப்படி? ஒரு தாரை கலைஞருக்கு 500 ருபாய் கொடுக்க யோசிக்கும் நமது மக்களும் கோவில் விழாக் குழுக்களும், கேரள செண்டைமேளக் குழுவுக்கு ஐம்பதாயிரம் கொடுத்து சிவப்பு கம்பளம் விரிக்கிறார்கள். எஞ்சி இருக்கும் இசைக்கருவிகளை நாமே அழிவின் வாயில் தள்ளுகிறோம். இந்நிலை மாறினால் தான் நமது மண்ணின் இசை பிழைக்கும்.

சின்னம் என்பது சில ஊதுகருவிகளுக்கான பொது பெயராகவும் உள்ளது. சூறைசின்னம் என்று ஒரு இசைக்கருவியை சிலம்பு பேசுகிறது "ஆறு எறி பறையும், சூறைச் சின்னமும் "வேட்டுவ வரி". இது வேட்டையின் பொழுது இசைத்த சின்னம். பீலி என்றும் ஒரு சிறிய சின்னம் இருந்துள்ளது (கரடிகை பீலி சாரி கைத்துடி - கந்தபுராணம்). பழனி மலை வேடுவர்கள் வேட்டையின் பொழுது சின்னம் என்கிற ஒரு அடி நீள இரும்பு குழல் கருவியவை அண்மைக்காலம் வரை ஊதி வந்தனர் என்றும் அறிகின்றோம்.

பழந்தமிழர் திருச்சின்னத்தை வெற்றியின் சின்னமாக பயன்படுத்தி உள்ளார்கள். தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்ட சில நடுகல் சிற்பங்களில் உள்ள வீரர்களின் கைகளில் திருச்சின்னம் செதுக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சின்னம் நெடுங்காலமாக இரட்டையாகவே ஊதப்படுகிறது. கண்டறியப்பட்ட நடுகல் புடைப்பு சிற்பங்களும் நமக்கு இதை உறுதி செய்கின்றன. கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி தாலுகாவில், ஐ. கொத்தப்பள்ளி கிராமத்தில் சுமார் 500 ஆண்டுகள் பழமையான நடுகற்களில் உள்ள வீரனின் கையில் இரண்டு திருச்சின்னங்கள் உள்ளன.

திருச்சின்னம் பற்றிய குறிப்புகள் தமிழக கல்வெட்டுகளில் காணப்படுகிறது. பிச்சன் என்று பாடச்சொன்னான் திருச்சின்னம் என்று வெள்ளியாலான திருச்சின்னத்தில் பெயர் பொறித்து, கி.பி. 1268 ஆண்டு, இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில், திருவெண்ணைநல்லூர் கோவில் இறைவனுக்கு கொடை அளித்த செய்தியை அக்கோவில் கல்வெட்டு உறுதி செய்கின்றது. "திருவெண்ணைநல்லூர் உடையார் ஆட்கொண்ட தேவர்க்கு மத்யஸ்தன் செஞ்சி உடையான் உதையன் கைலாயமுடையான் இட்ட பிச்சன் என்று பாடச் சொன்னான் திருச்சின்னம் இரண்டினால் வெள்ளி எடை ஐம்பத்து ஐங்கழஞ்சும்" (SSI Vol 12, No 231) என்பது அக்கல்வெட்டுத் தொடர்.

திருச்சின்னம் ஊதும் பொழுது "ஓம்" என்று ஒலி தரும். கூர்ந்து இருக்கும் முகப்பு இரண்டையும் ஒன்றாக வாயில் வைத்து ஊதவேண்டும். மிகுந்த பயிற்சியும், வலுவும் உள்ளவர்கள் மட்டுமே வாசிக்கத் தகுந்தது இது. திருச்சீரணம், திருச்சூரணம் என்றும் அழைக்கப்படும். முற்காலத்தில் கோவில்களில் தாசரி இனத்தவர் பெரும்பாலும் இதை இசைத்து வந்துள்ளார்கள். சிவபெருமான் சம்பந்தருக்கு முத்து சிவிகை அளித்த நேரத்தில் திருச்சின்னமும் அளித்ததாக (முத்தின் சிவிகை மணிக்குடை ஆன சின்னம்) பெரியபுராணம் இயம்புகிறது. அது வரை சின்னம் என்று அழைக்கப்பட்ட இக்கருவி இறைவன் அருளியதால் திருச்சின்னம் என்று அழைக்கப்படுவதாக சைவர்களின் நம்பிக்கை. சில சிவன் கோவிலிலும் பெருமாள் கோவிலிலும் இக்கருவி கண்டிப்பாக இசைக்கப்படும். கைலாய வாத்தியங்களில் ஒன்றாக திருச்சின்னம் முக்கியமாக இசைக்கப்படும். திருவரங்கத்தில் இசைக்கப்படும் 18 தமிழர் இசைக்கருவிகளில் திருச்சின்னமும் ஒன்று. திரு ரஞ்சித்குமார் என்கிற கலைஞர் இசைக்கிறார். பெருமாள் புறப்பாடு ஆகும் சமயங்களிலும் மங்கள ஆரத்தி தொடங்குவதற்கு முன்பும் திருச்சின்னம் இசைக்கப்படும். திருக்குடந்தை சாரங்கபாணிப் பெருமாள் கோவில் போன்ற பல பெருமாள் ஆலயங்களில் ஆழ்வார்களுக்கு பரிவட்டம் சடாரி சாத்தும் பொழுது திருச்சின்னம் ஊதுகிறார்கள். திருவரங்கத்திலும் மற்ற கோவில்களிலும் இசைக்கலைஞர்களுக்கு திருக்கோவில் நிரந்தர ஊழியர் பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பது நமது ஆசை. இதனால் இக்கலைகள் அழியாமல் பாதுகாக்கப்படும்.

தொண்டை நாட்டு பெருமாள் கோவில்கள் சிலவற்றில் திருச்சின்னம் ஊதப்படுகிறது. காஞ்சியில் உள்ள பெருமாள் கோவில்களில் உடல் மற்றும் தாளத்துடன் சேர்த்து திருமஞ்சனக் காலங்களில் திருச்சின்னம் இசைக்கிறார்கள். மேலும் வாகன புறப்பாடு, மங்கள ஆரத்தி நேரங்களிலும் திருச்சின்னம் இசைக்கப்படுகிறது. சுமார் 750 ஆண்டுகள் முன்பு வாழ்ந்த வேதாந்ததேசிகன் என்கிற வைணவ குரு திருச்சின்னமாலை என்கிற பதிகத்தை காஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதராசப்பெருமாள் மீது இயற்றியுள்ளார். இப்பாடல்கள் பெருமாளுக்கு விருது ஓதும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது. இக்கோவிலில் வேதாந்ததேசிகனின் திருச்சின்னமாலைக்கு மரியாதை செய்யும் விதமாக ஒற்றை திருச்சின்னம் பயன்படுத்துகிறார்கள்.

முன்பு தமிழர் பகுதியாக இருந்த பல ஆந்திர கோவில்களிலும் மேல்கீழ் திருப்பதி கோவில்களிலும் திருச்சின்னம் புழக்கத்தில் உள்ளது. கருநாடக மாநிலம் மேல்கோட்டை பெருமாள் கோவிலிலும் இக்கருவி இசைக்கப்படுகிறது. மடாதிபதிகள் கோவில்களுக்கு வரும்பொழுது அல்லது அவர்கள் மடத்தில் இருந்து வெளிப்படும் நேரங்களில் திருச்சின்னம் இசைக்கப்படும்.

அசாம் மாநிலத்தில் நமது திருச்சின்னம் போன்ற இரட்டைக் கருவி ஒன்று "ஜோடியா பேபா" என்கிற பெயரில் புழக்கத்தில் உள்ளது. எருமை கொம்பால் செய்யப்பட்ட இக்கருவியை அவர்கள் பி்ஹு என்னும் பாரம்பரிய விழாவில் இசைக்கிறார்கள். நமது திருச்சின்னதின் ஆரம்ப வடிவம் இப்படிக்கூட இருந்திருக்கலாம்.

**புழக்கத்தில் உள்ள இடங்கள்**

தொழில் ரீதியாக திருச்சின்னம் இசைக்கும் கலைஞர்கள் தஞ்சாவூருக்கு அருகில் உள்ள சுந்தரப்பெருமாள் கோவிலிலும், திருச்சியை ஒட்டியுள்ள பூவாளூர் போன்ற சில கிராமங்களிலும் உள்ளார்கள். சிவ வாத்திய குழுவினர் அனைவரும் திருச்சின்னம் இசைக்கிறார்கள். பெரும்பாலன சிவன் மற்றும் பெருமாள் கோவில்கள்.

திருச்சின்னம் என்றும் நமது மண்ணில் ஒலிக்க வேண்டுவோம். படத்தில் உள்ள QRI ஸ்கேன் செய்தால் நீங்கள் பல தமிழர் இசைக்கருவிகளைப் பார்க்கலாம்.

**பாடல்**

ஏறுதற்குச் சிவிகை இடக்குடை
கூறி ஊதக் குலவு பொன் சின்னங்கள்
மாறில் முத்தின் படியினால் மன்னிய
நீறு வந்த நிமலர் அருளுவார்

- **திருமுறை 12**

சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி
வெங்குரல் பம்பை கண்டை வியன் துடி திமிலை தட்டி
பொங்கொலிச் சின்னம் எல்லாம் பொரு படை மிடைந்த பொற்பின்
மங்குல் வான் கிளர்ச்சி நாண மருங்கு எழுந்து இயம்பி மல்க

- **திருமுறை 12**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணி மாதத்தின் சிறப்புக்கள்

தமிழர் வழக்கப்படி, ஆண்டின் ஐந்தாவது மாதம் ஆவணி ஆகும். சூரியன் சிங்க இராசியுட் புகுந்து அங்கே வலம் வரும் காலமான 31 நாள், 02 நாடி, 10 விநாடிகளைக் கொண்டதே இம் மாதமாகும். இம் மாதம் சைவ சமயிகளுக்கு முக்கியமான விரதங்கள், நாயன்மார்களின் குருபூசை, மற்றும் பண்டிகைகள் கொண்டிருப்பதால் சிறப்பு மிக்கதாக கருதப்படுகின்றது. இவற்றை சுருக்கமாக பார்ப்போம்.

**ஆவணி ஞாயிறு**

சூரியபகவான் சிங்கராசியிற் சஞ்சரிக்கும் காலம் ஆவணி மாதம். சூரியனின் ஆட்சிக்கு உட்பட்ட இராசி சிங்கம். ஆதலால் அம் மாதத்தில் வரும் ஞாயிறு நாட்களில் சூரிய வழிபாடு சிறப்புப் பெறுகின்றது.

சூரியன் மூலம் வெப்பமும் ஒளியும் பூமிக்குக் கிடைக்கிறது. மழை பொழிவதும் சூரியனால். ஜீவராசிகளும், தாவரங்களும் வாழ்வதற்கு இன்றியமையாதவன் சூரியன். எனவே சூரியனைப் பிரத்தியட்ச தெய்வமாக மக்கள் வணங்குகின்றார்கள். சூரியவழிபாடு மிகப்பழங் காலந்தொட்டு நிலவி வருகின்றது.

சங்காலத்திற் சூரியனைப் போற்றியுள்ளனர். “உலகம் உவப்ப வலனேர்புதிரிதரு பலர் புகழ் ஞாயிறு” என்கிறது திருமுருகாற்றுப்படை. சிலப்பதிகாரத்தில் “ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்” என்று கூறப்பட்டுள்ளது.

சிவபெருமானின் வலக்கண்ணாக அமைந்துள்ளான் சூரியன். இறைவனின் அட்டமூர்த்தங்களுள் சூரியனும் ஒருவன். இவை திருமுறைகளில் கூறப்பட்டுள்ளன. “அருக்கன் பாதம் வணங்கு வாரந்தியில் அருக்னாவது அரனுருவல்லனோ” என்பர் அப்பரடிகள். சைவ அனுட்டானத்தில் சூரிய நமஸ்காரமும் ஓர் அங்கமாகும். ஆலயங்களிலே நிகழும் பகற்பூசையில் முதலில் சூரியபூசை இடம்பெறும்.

நவக்கிரகங்களுள் நடுநாயகமாக விளங்குபவன் சூரியன். உடல்நலம், கல்வி, தொழில் வாய்ப்பு போன்றவையைக் கொடுக்கவல்லன் சூரியன் என்று சோதிடநூல்கள் கூறும். சூரியன் பிதிர்காரகன். கண்பார்வை பிராகாசமாக இருப்பதற்கு சூரியன் பலம் தேவைப்படுகின்றது. இதனாற்போலும் “கண்கெட்ட பிறகா சூரிய நமஸ்காரம்” என்ற முதுமொழி வழக்கில் உள்ளது.

தினமும் காலையிலே நீராடி வழிபாடு முடித்துச் சொந்தாமரை முதலிய சிவப்பு நிறமலர்கள் தூவிச்சிவசூரிய மூர்த்தியை வழிபட்டு, இருமுறை ஆன்மப் பிரதட்சணம் செய்து வந்தால் உடற்பிணிதீரும். இது முடியாதவர்கள் ஆவணி மாதத்தில் வரும் ஞாயிறுதோறும் வழிபாடு செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணி ஞாயிறன்று முற்றத்திலே பசுஞ்சாணத்தால் மெழுகி மாக்கோலம் போட்டு அடுப்புவைத்துப் பொங்கல் பொங்கிப் படைத்து அத்துடன் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், இளநீர் முதலியவற்றை நிவேதித்துச் செந்நிற மலர் தூவித்தூப, தீபம் காட்டித் தோத்திரம் பண்ணிச் சூரியனை வழிபடும் முறை தொன்று தொட்டு நிகழ்ந்துவருகிறது.

சூரியமண்டலத்தைத் தரிசித்துச், வெண்டாமரைப் பூவின்மேலே செவ்வொளியையுடைய வட்டமண்டலத்தின் நடுவே உள்ளவராய், மாதுளம்பூ நிறத்தினராய் ஒரு திருமுகமும் இரண்டு திருக்கண்களும், இரண்டு திருப்புயத்திலும் பொருந்திய அலர்ந்த வெண்டாமரைப்பூநாளம் இரண்டு பிடித்த திருக்கையும் உடையவராய்ச் சிவந்த வஸ்திரம் தரித்தவராய் உள்ள சூரிய மூர்த்தியைத் தியானித்துச் சிவசூரியாயநம என்று செந்தாமரைப்பூ முதலிய செம் பூக்களைத்தூவித் தோத்திரம் பண்ணி இரண்டு தரம் ஆன்மப் பிரதட்ஷணம் செய்து, வைகர்த்தனாய நம முதலான பன்னிரண்டு திருநாமங்களைச் சொல்லிப் பன்னிரண்டு நமஸ்காரஞ் செய்து எழுந்து கும்பிட்டு விரும்பிய வரங்களை வேண்டிக் கொள்க" இவ்வாறு நித்திய கருமவியலில் ஆறுமுகநாவலர் குறிப்பிடுள்ளார்.

**விளங்குதண்டி முதலிலோரார் சேவிக்கப்படுவோன்**
**விமலன் முதனாற் சிங்க பதாசனத்தின் மேலோன்**
**களங்கமிலாத் தீத்தை முத்சத்தி கணசகிதன்**
**சுருதருண மணியொளியன் கடோற்கான்ம மூர்த்தி**
**துளங்கலி றன்னங்கந் தன்னங்க மேனுங் கிரகந்**
**தொகுமுடுவாதிய சூழச் சுவேதகஞ் சத்திவர்ந்தோன்**
**வளங்கொள் சுவேதாம்புசத் தோட்கரனிரு நல்விழியோன்**
**வருசிவ சூரியன் காக்க மகிழ்ந் தடியேங்களையே.**

தேவரும் முனிவரும் போற்றும் சிவசூரிய மூர்த்தியை வழிபட்டால் உடல் நலம் பெற்றுச் சகல சம்பத்துக்களும் பெறலாம்.

**ஆவணி மூலம்**

குதிரை வாங்கச் சென்ற மணிவாசகப்பெருமானை சிவபெருமான் மானிட உருவில் குருமூர்த்தமாய் திருவடி தீட்சை வைத்து ஆட்கொண்டருளினார் என்கிறது புராணம். குதிரை வாங்க கொண்டுசென்ற பணத்தையெல்லாம் கோயில் திருப்பணிக்காக செலவு செய்துவிட்டார். பாண்டியன் தூதுவரை அனுப்பி, மணிவாசகரை அழைத்தபோது, சிவபொருமான் ஆவணிமாத மூல நட்சத்திரத்தில் குதிரைகள் வரும் என்று சொல்லி அனுப்பினார். அவ்வாறே, எம்பெருமான் காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கி ஆவணி மூல நட்சத்திரத்தன்று மதுரை வீதியிலே கொண்டு வந்தருளினார். இத்தினத்தை இன்றும் மூலப்பெருவிழாவாக மதுரையிலே கொண்டாடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆவணி அவிட்டம்**

ஆவணி அவிட்டம் என்னும் ஆண்டுச் சடங்கு உபநயனம் செய்து கொண்ட பிராமணர் ஆடி அல்லது ஆவணி மாதங்களில் அவிட்டம் நட்சத்திரத்தினோடு கூடிய பௌர்ணமியில் கடைபிடிக்கும் வழிபாடாகும்.

இது ரிக், யசுர்வேதிகள் கொண்டாடும் தினமாகும். சாம வேதிகள் பிள்ளையார் சதுர்த்தி தினத்தில் கொண்டாடுவர். இது ஓர் கூட்டுவழிபாடு ஆகும். இந்நாளில் அனைவரும் ஆற்றங்கரையிலோ குளக்கரையிலோ குளித்து இத்தகைய சடங்கினை உருவாக்கிய இருடிகளுக்கு நன்றி கூறி தர்ப்பணம் செய்வர். தந்தை இல்லாதவர்கள் தங்கள் மூதாதையருக்கு எள்ளும் அரிசியும் நீரில் கொடுத்து தர்ப்பணம் செய்வர். பின்னர் தாங்கள் அணிந்துள்ள பூணூலைப் புதுப்பிப்பதோடு தங்கள் வேதங்களைப் படிக்கவும் தொடங்குவர். சமசுகிருதத்தில் இது உபாகர்மா என வழங்கப்படுகிறது. இதன் பொருள் தொடக்கம் எனபதாகும். இன்றைய தினம் வேதங்களை படிக்க துவங்க நல்லநாள் எனக் கொள்ளலாம். சிரவணம் என்று சொல்லப்படும் இந்த கற்றல் துவக்கத்தை ஆவணி அவிட்டம் என்றும் அழைப்பர்.

**ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி**

பகவான் கிருஷ்ணர் பிறந்தது ஆவணி மாதத்தில். இம்மாதத்திலேயே கிருஷ்ண ஜெயந்தி கொண்டாடப்படுகிறது. ஓண நட்சத்திரத்திலேயே பரமாத்மா அவதரித்தார். என்பதும் நம்பிக்கை. அதனால்தான் ஓணத்திற்கும் சிறப்பு வந்தது.

திருமால் பிந்த நாளை பெரியாழ்வார் "நீ பிறந்த திருவோணம்" என்று பாடுகிறார். கோகுலாஷ்டமிதான் கண்ணன் பிறந்த தினம் என்பதும் பலருடைய நம்பிக்கை. கிருஷ்ண பரமாத்மா மதுரையில் அஷ்டமியில் தோன்றி, உடனேயே கோகுலத்திற்குக் கொண்டுபோகப்பெற்று, அங்கே பிறந்தவன் போன்றே வளர்ந்ததாகவும், அதனாலேயே கோகுலாஷ்டமி என்று பெயர் வந்ததாகவும் கூறப்படுகிறது. அதைக் கொண்டாடவேண்டிய நாள் ஆவணி மாத கிருஷ்ண பட்ச அஷ்டமியாகும். அன்று ரோஹிணி நட்சத்திரமும் அனேகமாக இருக்குமாம். கண்ணன் நள்ளிரவில் தோன்றியதால் ஆவணி மாதத்தில் ரிஷப லக்கினத்தில் அஷ்டமி திதி இருக்கும் நாள்தான் கண்ணனின் பிறந்த நாளைக் கொண்டாட ஏற்றது.

திதியை முக்கியமாகக் கொண்டவர்கள் கோகுலாஷ்டமி ஜன்மாஷ்டமி என்றும், நட்சத்திரத்தை சிறப்பாக கொண்டவர்கள் ஸ்ரீ ஜயந்தி என்றும், ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி என்றும் அழைப்பர. இதனாலேயே கண்ணன் பிறந்த நாள் பலராலும் வெவ்வேறு நாட்களில் கொண்டாடப்பட்டு வருகிறது.

காலை முதல் விரதமிருந்து, நள்ளிரவில் இலக்கினம் வந்ததும் கண்ணனுக்கு வழிபாடு செய்து, அதன்பின்னர் உணவருந்தி, இரவு முழுவதும் கண்விழித்து பஜனை செய்து கொண்டாடவேண்டும். இவ்வாறு அனுஷ்டித்தால் அஸ்வமேத யாகம் செய்த அளவுக்கு பலன் கிடைக்குமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ நாமத்தின் பெருமை

கலாநிதி ம. பாலகைலாசநாதக்குருக்கள்,
முதுநிலை விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வேதத்தின் சாரம்சமாக இருப்பது ஸ்ரீ ருத்திரம். ஸ்ரீ ருத்திரத்தில் சங்கர ஸ்வரதருபத்துக்கு அடுத்தபடியாக சிவஸ்வரூபம் சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமான ஜனங்கள் தெரிந்தும் தெரியாமலும் ஜன்மாந்திரங்களில் செய்த பாவத்தைப் போக்க சுலபமாக உபாயம் நம் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறதா? என அறிய முற்படுகின்றார்கள். ஒரேவழிதான் உண்டென்று தெரிகிறது. நாம் சாஸ்திரங்களை நம்புகின்றோம். கோயிலுக்குப் போகிறோம். மற்ற மதத்தவர்களிற் சிலர் "உங்கள் மதத்தில் பாவத்தை பரிகரிக்க வழி இல்லை. எங்களிடம் இருக்கிறது. கொஞ்சம் தீர்த்தம் தெளித்தால் பாவம் எல்லாம் போய்விடும். ஆகையால் எங்கள் மதத்திற்கு வாருங்கள்" என்று சொல்லுகிறார்கள்.

அதைக் காட்டிலும் சுலபமான மார்க்கம் நமது மதத்தில் இருக்கின்றதென்று தெரிந்துகொண்டிருந்தால் கூப்பிடுபவர்களைப் பார்த்து "முதலில் எங்களை கூப்பிடும் பாவத்தைப் பரிகாரம் பண்ணுங்கள்" என்று சொல்லுவோம். பாவ பரிகாரத்துக்கு சுலபமான வழி பாகவத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சுகாசாரியர் ஏழு நாளில் பரீட்சித்துப் பாகவதத்தை உபதேசித்தார். அந்தப் பாகவதத்தில் தாஷாயணியின் கதை வருகிறது. அதில் மோட்சம் அடைய ஓர் உபாயம் சொல்லப்பட்டிருக்கிறது.

தாஷாயணி என்பது அம்பிகையின் பெயர் பார்வதி வருவதற்கு முன்பு தஷனுக்குப் புத்திரியாக அம்பிகை அவதரித்த பொழுது தாஷாயணி எனும் பெயருடையவளாக இருந்தாள். தஷன் சிவனை நிந்தித்தான். அதனால் அவனுக்குப் பெண்ணாக இருப்பது கூடாதென்று நினைத்து தேகத்தை விட்டுவிட்டுப் பார்வதியாக அவதரித்தாள். தஷன் சிவத் துவேஷம் உடையவனாக இருந்தான். "சிவ" என்பதற்கு பரமமங்களம் என்று அர்த்தம்.

பரிமளம் என்று அப்பையதீஷிதர் ஒரு கிரந்தம் (நூல்) எழுதியிருக்கிறார். வாசஸ்பதிமிச்ரர் பாமதி என்று ஒரு கிரந்தம் எழுதியிருக்கிறார். அதனுடைய வியாக்கியானம் கல்பதரு என்பது அதனுடைய வியாக்கியானந்தான் பரிமளமென்பது அந்தப் பரிமளத்தை ஒருவர் கண்டனம் செய்தார். அவர் கண்டனம் செய்தாரென்று யாரோ வந்து அப்பையதீஷிதரிடம் சொன்னார். அப்பெரியவர் மூக்கைப் பிடித்துக் கொண்டார். பரிமள கண்டனம் செய்தால் அபரிமளந்தானே உண்டாகும்! அதுபோல தஷன் சிவஸ்வரூபத்தைத் துவேசித்தான். சர்வமங்கள மூர்த்தி சிவன். சிவனிடம் துவேசம் வந்தால் அவர்களிடம் அசிவந்தான் இருக்கும் அதாவது அமங்களம் அகல்யாணம் தான் இருக்கும்.

தாஷாயணி தஷனைப் பார்த்து "என்ன பாவம்! நீ சிவத்துவேஷம் பண்ணுகிறாய். உனக்கு அமங்களம்தான் வந்துசேரும்" என்று சொல்லுகிறாள். இந்தக் கருத்துப்பட சுலோகத்தின் பின்பாதியில் நல்லது சொல்லியிருக்கிறது. முன்பாதியில் தஷன் சமாசாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சுலோகம் அம்பிகையின் வாக்கியம் யாராவது முன் காலத்தில் உடன் கட்டை ஏறினால் அவர்களுடைய துணியை வைத்து ஆராதனம் செய்வார்கள். அவர்கள் ஆத்மஞானியின் நிலையை அடைந்தவர்கள். எல்லாவற்றையும் தியாகம் பண்ணும் சக்தி இருப்பதால் அவர்கள் பூஜிக்கப்படுகிறார்கள்.

அம்பிகை அந்த நிலையிலிருந்து சொன்னது இது அந்த சமயத்தில் சொன்ன சத்தியத்திற்கு விலையேயில்லை. அக்கினி குண்டத்தில் பாதி விரத்தியத்தை காப்பாற்றிக் கொள்ளச் சரீரத்தியாகம் செய்யும் பொழுது சொன்ன வார்த்தையை விட சத்தியமான வேறு வார்த்தை கிடையாது.

பாவத்தை ஒரே கணத்தில் துவம்சம் பண்ணும் ஒரு வஸ்து உண்டு. அந்த வஸ்துவை பல இடங்களுக்குப் போய்த் தேடவேண்டாம். இரண்டு எழுத்துக்களாலான பெயர் அது. சகல வேதங்களுக்கும் மத்தியில் இருப்பது அது. அதுவே வேதங்களின் ஜீவரத்தினம் கோயிலில் மகாலிங்கம் போலவும் தேகத்தில் உயிர் போலவும் அது வேதங்களின் மத்தியில் இருக்கிறது.

அது என்ன? "சிவ எனும் மங்களம் பொருந்திய நாமம் அதை என்ன செய்யவேண்டும்? -சிவ என்று வாக்கினாற் சொல்ல வேண்டும். யார் சொல்லவேண்டும்? -மனிதனாகப் பிறந்தவன் சொல்ல வேண்டும். ஊமையாக இல்லாத எவனும் சொல்லலாம். அதைச் சொலுவதற்காகத்தான் நாக்கு இருக்கிறது. மனிதன் அதைச் சொல்லாவிட்டால் "நாக்கினால் செய்யக் கூடியதை இவன் செய்யவில்லை. இவனுக்கு நாக்கு கொடுத்தது. பிரயோஜனமில்லை" என்று பரமேசுவரன் திரும்பி வாங்கிவிடுவான். ஆகையால் எல்லோரும் அதைச் சொல்லியாக வேண்டும். சண்டாளனும் சொல்லவேண்டும். அந்தளவு தூரம் சிவநாமோச்சாரணம் முக்கியமானதும் பெருமைமிக்கதுமாகும்.

அதை ஒருதரம் சொன்னாற்போதும் கவனமாகச் சொல்லவேண்டும் வேறெரு காரியத்துக்கு நடுவிலும் சொல்லலாம். சொன்னால் கணத்திலேயே அது பாவத்தைப் போக்கிவிடும்.

இந்த விஷயம் பாகவதத்தில் சொல்லியிருப்பது விசேஷம். சிவபுராணத்தில் சொல்லப்பட்டிருந்தால் தோத்திரம் என்று சொல்லிவிடலாம். பாகவத்திலே விஷ்ணு தோத்திரம் இருந்தால் அது அவ்வளவு விசேஷமானதல்ல. அதிலும் இது உத்தமத்திலும் உத்தமத்திலும் உத்தமமான காலத்தில் சொன்னது. சுகாசாரியர் பரீஹித்துக்குச் சொல்லும் சத்தியவாக்கியம்.

பரமேசுவரனுடைய கீர்த்தியை நாம் வாக்கினால் சொல்லுவதனாலும் கேட்பதனாலும் பவித்திரர்களாகிறோம். அவருடைய ஆஜ்ஞையை யாரும் மீறமுடியாது. அவரால் எல்லாம் சுற்றுகின்றன. அகம்பாவமாக இருக்கும் பொழுது அவர் சிஹிக்கிறார். குழந்தைகள் ஏதாவது தப்புச் செய்தால் நாம் அடிக்கிறோம். அதுபோல பரமேசுவரன் தேவதைகளைச் சிஹித்தார். காளகூடவிஷம் பாற்கடலில் உண்டானபொழுது அதைச் சாப்பிட்டு அவர்களை ரட்ஷித்தார். சகல தேவதைகளும் பரமேசுவரனுடைய குழந்தைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேசுவரனை நாம் நேரிற் பார்த்து நமஸ்காரம் செய்யவேண்டாம். அவருடைய நாமமே போதும், நமக்கு நன்றாகத் தெரிந்தது அது. நம்முடைய மதத்தில் பாவ பரிகாரத்துக்கு சுலபமான மார்க்கம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது இந்த நாமஸ்கரணந்தான். பிரதோஷ காலத்தில் இந்த நாமாவைச் சொன்னாற் போதும் பெரியவர்கள்- சிஷ்யர்கள் சாயங்காலத்தில் சொல்லுவது வழக்கம். அப்பேர்பட்ட சர்வேசுவரன் சகல வேத சாஸ்திரங்களின் தாத்பரியமாகிய ஓங்கார ஸ்வரூபமாக இருக்கிறார். ஓங்காரந்தான் எல்லாத் தத்துவங்களுக்கும் முடிவானது.

பரமேசுவரன் ஓங்காரம் சர்வரூபப் பிரம்மமும் ஓங்காரந்தான். ஸர்வதேசங்களும் ஓங்காரத்தைச் சொல்லுகின்றன. அதனுடைய அர்த்தத்தை விசாரிக்கும் ஓர் உபநிஷத்தே தனியாக இருக்கிறது. அதற்கு மாண்டுக்யோபநிஷத் என்று பெயர் சிவஸ்ரூபந்தான் பரப்பிரம்மம். சாயங்கால வேளைகளில் சிவத்தியானம் செய்யவேண்டும். பிரதோஷக் காலத்தில் ஈசுவர தரிசனம் செய்யவேண்டும். ஈசுவரன் கோயிலில் பிரதோஷக் காலத்தில் எல்லாத் தேவர்களும் வந்து ஈசுவர தரிசனம் செய்கிறார்கள்.

பரமேசுவரனுடைய நாமாவாகிய "சிவ" வேதத்தின் மத்திய ஸ்தானத்தில் இருக்கிறது. சாங்கிய சாத்திரத்தில் ஈசுவரன் மூன்று கண்ணுள்ளவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அமரமும் அப்படியே சொல்லுகிறது. லோகத்தில் ஈசுவரன் என்ற சப்தம் சிவனுக்கே வழங்கப்படுகிறது.

அவன் மஹாபுருஷன் இவ்வாறு பரமேசுவரனுடைய நாமத்தின் பெருமை சுருதியில் கர்ம காண்டமாகிய ஸ்ரீ ருத்திரத்திலும் ஞானகாண்டமாகிய மாண்ரூக்யோ உபநிஷத்திலும் மற்ற சூத்திரங்களிலும் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பிரம்ம சூத்திரத்தில் சிவ என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஈசானான் என்னும் சப்தத்துக்கு எது அர்த்தமோ அது தான் பரமேசுவரரூபம் இவ்வளவுக்கும் பரம தாத்பரியமாக ஒன்று இருக்கிறது. இதுதான் இந்த இரண்டு எழுத்து "சிவ" என்பதையே கொஞ்சம் நீட்டி "சிவா" என்று சொன்னால் அது அம்பிகையின் பெயராகும் என்று வேதம் சொல்லுகிறது. பரமசிவனுக்கு இரண்டு சரீரங்கள் இருக்கின்றன. ஒன்று பரம மங்கள ஸ்வரூபம் மற்றொன்று எலும்பொன்றை அணிந்துகொண்டு ஜடாதாரியாக இருக்கிற ஸ்வரூபம் சர்வமங்கள என்பது அம்பாளின் பெயர்.

அந்த அம்பாள் தான் உயிர் இந்த இரண்டு ஸ்வரூபங்களும் லோகத்தில் எல்லோருக்கும் பிதாவாகவும் மாதாவாகவும் இருக்கின்றன. ஆகையால் நாம் யாவரும் சிவத்தியானம் செய்யவேண்டும். நல்லகதியை அடைய சுலபமான வழி அதுதான்.

எந்த வஸ்து காயத்திரி அக்கினி, ரட்ஷகன் என்னும் மூன்றிலும் பிரகாசிக்கிறது? சிவன்தான் காயத்திரியின் பரம தாத்பர்யமாருப்பவர் அவரே சூரியனிடத்தில் பிரகாசிப்பவர் அவர்தாம் ரட்ஷிப்பவரும் அவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீருத்திரத்தில் பரமேசுவரன் அக்கினி ஸ்வரூபமாகிய இருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த ஜன்மம் வந்தாலும் சாஸ்திரம் இதுவாக இருக்க வேண்டும். ஸ்வாமி ஸ்ரீ சந்திரமௌலீசுவராக இருக்க வேண்டும் என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது. சிவ என்ற இரண்டு அகரங்களை எப்பொழுது சந்தர்ப்பம் நேர்ந்தாலும் உச்சாரணம் பண்ணிக்கொண்டு இருக்கவேண்டும். எந்த ஜன்மம் வந்தாலும் அதை மறக்காமல் இருக்கவேண்டும். அப்படி இருந்தால் ஜன்மமேயில்லாத பரமசாந்தநிலை உண்டாகும்.

தற்போதைய காலம் கலியுகமாகும். கலியுக தர்மத்தில் பஜனையும் நாம சங்கீர்த்தனையும் நமோச்சாரணமும் அவசியம் செய்யப்பட்ட வேண்டுமென சிவ மஹாபுராணமும் விஷ்ணு புராணமும் உறுதியாகக் கூறுகின்றன. குறிப்பாக “சிவபூமி” எனச் சிறப்பிக்கப்பட்ட இலங்கையில் சிவவழிபாடு மேன்மைப்பட்டு காணப்படுகின்றது. சிவனையே எமது சமயக்கடவுளாகவும் உலகின் முழுமுதற் கடவுளாகவும் கொள்ளும் நம்பிக்கை மேலோங்குகின்றது. சிவனை நம்பி சிவ. சிவா என்று எப்போதும் நமோச்சாரணம் சொல்லும் சைவர்கள் நிலைத்திருக்கிறார்கள். சிவ நமோச்சாரணமே போதும் என்ற நிலைப்பாடு வழிபாட்டு நெறியில் வளர்ந்து வருகின்றது.

வழிபாட்டு முறையில் எல்லோரும் சேர்ந்து சிவ பஜனை, சிவநாமோச்சாரணம், சிவாய நமஹ, நமசிவாய என்று மன அடக்கத்துடன் உச்சரிக்கும்போது வலிமைபெற்ற வழிபாடாகி பரிணமிக்கின்றது. அத்துடன் சிவவழிபாட்டில் சிவத் தொண்டு செய்தல், ஒழுங்குபடுத்துதல். அடியார்களைப் பேணல் அடியார்களின் நலன் கொள்ளல், அன்னதானமிடல், கல்வி கேள்விகளுக்கு வித்திடல், சமுதாய நலம் பேணல் போன்ற சிவ கைங்கரியமான சிவதொண்டுகளும் தற்காலத்தில் மிகவும் அவசியம் வேண்டப்படுகின்றன. இவற்றிக்கு முன்னோடியாகச் செயற்பட்டு வருகின்ற உயர்ந்த சமய அமைப்பாக விளங்குவது அகில இலங்கை இந்து மாமன்றமாகும். இந்து மாமன்றத்தின் ஒரு பகுதியாக காணப்படும் சிவதொண்டர் அணியினரும் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கு உந்துசக்தியாக இருப்பது மட்டுமன்றி அவற்றை வாழ்வியல் பயன்பாட்டில் நடைமுறைப்படுத்தி எமது இந்துமதத்தின் சிறப்பையும், பெருமையையும் நிலைநாட்டி வருகின்றனர் என்பதையும் தெளிவாகக் காணமுடிகின்றது.

**நன்றி - ‘இந்து ஒளி’ - மன்மத வருடம் ஆனி - ஆடி**

**குலச்சிறை நாயனார்**

“பெருநம்பி குலச்சிறை” என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளாற் போற்றப்பட்ட குலச்சிறையார் பாண்டி நாட்டின் மணமேற்குடியில் தோன்றியவர். சிவனடியாரின் குலநலன் எதையுங் கவனியாது அவர் பலராய் வரினும் அமுதூட்டும் பக்குவம் நிறைந்தவர். நின்றசீர் நெடுமாறன் என்னும் பாண்டிய மன்னனின் முதலமைச்சராய் இருந்தவர். மங்கையர்க்கரசியாரின் திருத்தொண்டிற்குப் பேருதவி புரிந்தவர். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளின் பொன்னடியைப் போற்றியர்.

இவர் முத்தியடைந்த திருநாள் **ஆவணி அனுஷம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாலமெல்லாம் மூலமான மும்மலம் அறுக்கும் ஆவணி மூலம்

அமரர் சிவ. சண்முகவடிவேல்

நான்மாடக் கூடல் நன்மாடம் மலி மறுகுகள் மல்கியது. மதுரைக்கு நான்மாடக் கூடல் மற்றொரு நாமம். மதுரைக்கு வந்த சோதனைகள் மலையச் செய்வன. காலத்திற்குக் காலம் கவின் கெட்டு அழிந்தமை வரலாறு கண்ட உண்மை. புராணங்கள் புகலாநிற்கும், இலக்கியங்கள் இரங்கிப்பாடும், சரித்திரம் சான்றுரைக்கும்.

ஒவ்வொன்றும் வெவ்வேறு காலங்களில் விளைந்தன. வேறு வேறான விளைவுகளை ஏற்படுத்தின. மதுரை கடல் கோள்களினால் கலக்கம் கண்டது. கற்பரசி கண்ணகியால் கண்ணீர் வடித்தது. புறச்சமயத்தால் போற்றொழிந்தது. வடநாட்டரசர் படை எடுப்பால் தன்னிலை தவிர்ந்தது அந்நியர் ஆதிக்கத்தால் ஆட்டங் கொண்டது. இவ்வாறு பல சோதனைக் காலங்களில் மங்கியது மதுராபுரி சாதனை புரிந்த காலத்தில் புகழ் பூத்துப் பொங்கியது.

**ஆவணி மூலம்**

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவும் மதுரை அல்லோல கல்லோலப்பட்டது. ஆவணி மாசம் அது. மூல நட்சத்திரம் செறிந்த நாள். குதிரைகளின் வருகையைக் கண்டுகளிக்க மாந்தர் கூட்டம் கூட்டமாகக் குழுமினார்கள். வீதிகள் எங்கும் விழாக் கோலம். வாயில்கள் எல்லாம் அலங்காரம், பொற்குடம், பூரண கும்பம், மணிவிளக்கு, அணிநிரைத்தோரணம், திணிமலர் மாலை, பணி மணி மாலை...

வானம் மறைந்த பந்தர்கள் அணி அணியாகக் கதலி, கமுகு, தோரணம், தேன்மொழித் தெரிவையர் தெரு நிறைய பூவையர் பொழியும் திருவீதி. பாவையர் பயிலும் பலவிடயங்கள். ஆடவர் நிறைந்த அரசவீதி... தூரிய முழக்கம்... பேரிசைக்கீதங்கள்... பின்பனித் தூவல் போல் பன்னீர் நறுமணம் எங்கும் கண் கொள்ளாக்கட்சி. மதுரையில்- மாளிகையில் கூடங்களில் மாடங்களில் சந்தி சதுக்கம்... எங்கும் எங்கும் முந்தி வந்தார்கள் கந்துகம் காண.

ஆலவாய் அண்ணலின் அருள் ஆடலை ஆர்அறிவார். ஆவணி மூல தினத்தன்று மதுரைக்கு வந்த சோதனை முப்புவனங்களாலும் போற்றப்படுவது. முதன்மையானது அடியவருக்காகப் பரம்பொருள் பரிமேலழகராகப் பரிணமித்தார். நாட்டிலுள்ள நரிகளை நல்ல பரிகளாகப் பண்ணினார். செம்மணச் செல்வி அம்மையாரிடத்தில் பிட்டமுது செய்தார். அடியார்க்கு எளியான் சிற்றம்பலத்தான் என்ற உண்மையை அனைத்துப் புவனங்களும் உணர்ந்தன. கொன்றை முடியார் கொட்டுடைத் தோழரானார். கூடையில் மண் சுமந்தார். அஞ்ஞானிகளும் திருவருளை நன்குணர வைத்தது. அடியவனின் அன்பை ஆண்டவன் ஏற்ற நாள். அடியார் வான் புகழ் வானளாவப் பரவிய நாள். இவ்வனைத்துக்கும் உரியநாள் ஆவணி மூலம் முப்புவனங்களிலும் முதன்மை பெற்ற நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரி பரியாதல்:- மணிக்கவாசகப் பெருமானுடைய ஞானகுரு கைலாசபதி. கைலாசபதி- கோகழி ஆண்ட குருமணி. குருமணி திருப்பெருந்துறை கொடுத்த வாக்கு இது.

"ஆவணி மாசத்தில் மூல நட்சத்திரம் செறிந்த தினத்தில் உலகம் மதிக்க நல்ல குதிரைகள் கொண்டு வருவோம். மதுரை மன்னவனுக்கு வழங்குவோம்".

**வாக்கு வாய்மையானது.**

அழகு விளங்கும் மதுரை இராசானிக்குக் குதிரைகள் வந்தன. அன்று ஆவணி மாத மூல நாள் வாதவூரடிகள் வழங்கிய பொருளுக்கு வந்த குதிரைகள் அவை அல்ல. உலகு எங்கும் விபூதி திருவைந்தெழுத்துத் தழைத்து ஓங்க வந்தன. அதனால் நாட்டிலுள்ள நரிகளை நல்ல குதிரைகள் ஆக்கி வந்தார் நான் மாடக் கூடற்பெருமான்.

*களிப்பு: பாண்டிய மன்னன் மட்டும் தானா மகிழ்ந்தான்? மதுராபுரி மாந்தர்கள் அனைவரும் குதிரைகள் கண்டு களித்தார்கள் பரிமேலழகர் பார் மன்னனிடத்தில் பகர்வார்.*

*"இந்தக் குதிரைகளைக் கயிறு மாறிக் கொள்வதினால் உன்னுடையனவாகும். நாளை இவை என்ன தன்மையை அடைந்தனவாயினும் உன்னுடையனவாம். அது பற்றி உனக்கும் எனக்கும் ஏது ஒரு வழக்கும் இல்லை. இது குதிரை வியாபார முறையாகும்".*

*அரசன் மனமகிழ்ந்து ஒப்புக் கொண்டான். பாம்பணியாப்பரமர் இலக்கணம் பகர்ந்தார். கயிறு மாற்றப்பட்டது. அரசன் குதிரைகளை ஏற்றான்.*

**வரலாற்று உண்மை**

சிவபிரான் நரியைப் பரியாக்கிய செய்தி திருமுறைகளில் அருமையாகவே காணப்படும். திருவாசகத்தில் நிறையவரும். திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாரூர்த் திருப்பதிகம் ஒன்றில் பின்வருமாறு பாடுவார்.

"நரியைக் குதிரைசெய் வானும்" என்று

இந்நிகழ்வு மணிவாசகப் பெருமானுக்கு இறைவன் இயற்றிய திருவிளையாடலாகும். அந்நிகழ்வு திருவாசகத்தில் பரக்கக் காணப்படுவதே சான்று அல்லாமலும் தம்மோடு இணைந்தும் அந்த அற்புதத்தை பாடுவார். அவற்றிலே ஒரு சில பின்வருமாறு அமையும்.

"குதிரையைக் கொண்டு குடநாடு அதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தான்எழுந் தருளியும்"
"நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்"
"பாண்டியன் தனக்குப் பரிமா விற்று"
ஈண்டு கனகம் இசையப் பெறாது ஆண்டான்"
"ஞாலம் மிகப்பரிமேற் கொண்டு நமை யாண்டான்"
"நான்பொன் மேனிச்சுவடு ஒத்த நற்பரி மேல்வரு வானை"
"சிந்தனை செய்து அடி யோங்கள் உய்ய

ஆடல் அமர்ந்த பரிமா ஏறி ஐயன்"

"நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெலாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்ச தேற்றும் பெருந்துறையாய்"

"பந்தம் பரியப் பரிமேற் கொண்டருளி"

"நரிகள் எல்லாம் பெருங்குதிரை ஆக்கியவாறு அன்றே உன் பேரருளே"

இப்படி இன்னும் அனேகம் அனேகமாகக் காணலாம்.

**பிட்டமுது**

சிவபிரான் திருவருளால் பரிமீண்டு நரியானது. நரியானதால் வாதவூரடிகள் தண்டிக்கப்பட்டார். தண்டனையைச் சுடுமணல் மீது நின்று அனுபவித்தார். அன்பனின் வெப்பத்தை ஐயன் தணித்தார். கங்கை ஆறு வைகையாகப் புது வெள்ளமாகப் பெருக்கு எடுத்தது. வைகை ஆற்றில் செம்மணச் செல்வியார். பாகம் அடைக்கக் கூலியாள் தேவைப்பட்டது. ஆலவாய் அண்ணல் அடியவளுக்காகக் கூலியாளராக உருமாறினார். தவச்செல்வி பிட்டினை கூலியாளருக்குக் கொடுத்தாள். கூலியாளரும் பிட்டினுக்கு அளவாக மண்ணினைக் கோலறைப் பாகத்தில் கொட்டினார். பிரம்படியும்பட்டார்.

**எடுத்துக் சுமந்தார்**

மதுரை நாயகன் மண் சுமந்து அடியாபட்டார்? செம்மணச்செல்வி அம்மையார், வாதவூரடிகள், தவசீலர்களுடைய எஞ்சிய வினையை எடுத்துச் சுமந்தார். அவர்கள் வினைப்போகமே பிரம்படிபடுதல்.

**நிகழ்ச்சிப் பிணைப்பு**

வாதவூரடிகளுக்காகக் குதிரை வந்தமை செம்மணச்செல்வியாருக்காக பிரம்படி உண்டமை- இரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்துள்ளமை சிறப்பு வைகையாறு பெருகியது வாதவூரருக்காக வைகையில் அடியுண்டமை பிட்டு வாணிச்சியம்மையாருக்காக.

**வரலாற்று உண்மை**

அப்பரடிகள் சிவபிரான் வைகைக்கரையில் நின்ற காட்சியைக் காட்டுவார் திருத்தாண்டகத்தில்,

"மணியார் வைகைத் திருகோட்டில் நின்றதோர் திறமுந்தோன்றும்"

பெருமான் பிட்டமுது செய்தமை, பிரம்படி பட்டமை, மண்சுமந்தமை ஆகியவற்றைத் திருவாசகத்தில் நிறையக் காணலாம்.

"ஆங்கது தன்னில் அடியவருக்கு ஆகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்"

"பிட்டு நேர்பட மண்சு மந்தபெருந்
துறைப் பெரும் பித்தனே"

"மண்பால் மதுரையில் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட"

"கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை: மண்சுமந்து
கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு...."

இவை போல்வன அனேகம் திருவாசகத்தில் சான்று பகர்வன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆவணி மூலச் சிறப்பு**

வாதவூரடிகள் முத்தரானார். அரிமர்த்தன பாண்டிய மன்னன் சிவானந்தக் கடல் மூழ்கினான். சிவகணத்தவர்கள் கதிர்விடு விமானத்தில் அன்னையை ஏற்றினார்கள் சிவபுரத்தில் சேர்த்தார்கள். உலகு எங்குமாக மறைந்துள்ள அனைத்து உயிர்களையும் ஆனந்த வெள்ளத்து அழுத்திய நாள் அஞ்ஞானிகளையும் மெஞ்ஞானத்தைச் சிந்திக்க வைத்த சீரிய நன்னாள்.

**உரிப்பொருள்:-** ஆவணி மூலத்தில் குதிரை வந்தது. நரி பரியானது வைகைப்பெருக்கு இவை வெளிப்படை இவற்றின் உரிப்பொருள் யாது?

நரி- குணம், நரிக்குணம் மனிதனிடத்தில் நிறையவுண்டு ஆசையை வளர்த்துக் கற்பனை பண்ணுதல்.

"நரிவி ருத்தம தாகுவர் நாடரே" என்பது அப்பர்வாக்கு. சுருக்கக் கூறின் புலன் நுகர்வு விருத்தி.

குதிரை- குணம். குதிரைக்குணம் மனிதரிடத்தில் மறைந்துள்ளது. புலன் ஒடுக்கம். இலக்கை நோக்கிப் பாய்ந்து செல்லுதல்- யோகம்.

பெருமான் நாட்டிலுள்ள நரிகளை நல்ல பரிகளாக்கினார் என்றால்- மாந்தரின் மன மயக்கத்தை மாற்றினார். சிவலோக நெறியில் நிறுத்தினார். சிவலோகநெறியில் தலைப்பட்ட மாந்தர் திருவருள் வெள்ளத்தில் திளைத்தார்கள் அது தான் வைகையில் புது வெள்ளப் பெருக்கு.

**அருள் மழை:-** அருள்வெள்ளம் ஆற்று வெள்ளமாக பெருகும். "அண்ண லார் அருள் வெள்ளத்தை நோக்கி அங்கயற் கண்ணி கம்பை வெள்ளமாகக் கருதினார்.

"அடியனேன் ஆரூரர் கழல் போற்றிப் புரசையானைமுன் சேவித்து வந்தனன். பொழியுநின் கருணைத்தென் டிரைசெய் வெள்ளமுன் கொடுவந்து புகுதலின் திருமுன்புவரப்பெற்றேன்"

என்பது சேரர் திருவாக்கு.

".....எங்கோமான் அன்பர்க்கு முன்னியவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே என்னப் பொழியாய் மழை" என்பது திருவாதவூரரின் மணிவாக்கு.

**நன்னாள்:** ஆவணி மூலம் அரிய நாள் அருந்துணை அடியார்க்கு அருள் புரிந்த நாள் அருள் வெள்ளம் மேதினி மேல் வெளிப்பட்ட நாள் சொல்லற்கரியான் அல்லற் பிறவி அகற்றி ஆனந்த வெள்ளத்து அழுத்தும் நாள் பிறவிக்கு மூலமான மும்மலங்கள் அறுக்கும் நாள் அந்நாளில் பரமன் அடியினை பரவிப் பயன் பெறுவோம்.

**நன்றி: இந்து ஒளி - பிரமாதி ஆடி- புரட்டாதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுக்காத்தல்

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர்

பசுக்கள் நத்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என ஐந்துவகைப்படும். அவைகளுள் நத்தை கபில நிறமும், பத்திரை கருநிறமும், சுரபி வெண்ணிறமும், சுசீலை புகைநிறமும், சுமனை செந்நிறமும் உடையனவாம். பசுக்கள் இம்மை மறுமை இரண்டிலும் பயனைத் தரும். பசுக்களுக்குச் சாலையை விதிப்படி செய்வித்து, ஆற்றுமண். ஓடைமண், புற்றுமண், வில்வத்தடிமண், அரசடிமண் என்பவைகளால் நிலம் படுத்தல் வேண்டும். முதிர்க்கன்று இளங்கன்று நோயுற்றகன்று என்னும் இவைகளுக்கு இடங்கள் வெவ்வேறாக அமைத்தல் வேண்டும். நாடோறும் கோசல கோமயங்களைக் புறத்தே நீக்கிச் சுத்திசெய்தல் வேண்டும். கொசு வராமல் தூபமிடல் வேண்டும். தீபங்கள் ஏற்ற வேண்டும்.

பசுக்களை இயக்குமிடத்து சிறிதும் வருந்தச்செய்யாமல் இரக்கத்தோடும் பலாசங்கோலினால் மெல்ல ஓங்கி, போ, போ என்று இயக்கல் வேண்டும். இரக்கமின்றிக் கோபித்து அதட்டி அடிப்பவர் நரகத்தில் வீழ்வர். பசுக்களை சாலையினுள்ளே சுவத்தி என்னும் சொல்லைச் சொல்லி மெல்ல மெல்லப் புகுவித்து சிரத்தையோடும் புல்லைக் கொடுத்தல் வேண்டும். நோயுற்ற பசுக்களுக்கு வேறிடம் அமைத்து மருந்து கொடுத்து பேணல் வேண்டும். அட்டமி தோறும் பசுக்களை நீராட்டி, பூச்சூட்டி, அன்னமும் சலமும் ஊட்டி தூப தீபங் காட்டி வணங்கல் வேண்டும். பசுக்களை வேனிற் காலத்திலே சோலைகளிலும் மழைக்காலத்திலே மலைச்சாரல், வனங்களிலும், பனிக்காலத்திலே வெய்யில் மிகுந்த வெளிகளிலும், இடறுறாவண்ணம் மேய்த்தல் வேண்டும்.

பசுக்களை வலஞ்செய்து வணங்கித் துதித்துப் புல்லுக் கொடுத்தலும், ஆவுரிஞ்சுகல் நாட்டுதலும், கடவுளுக்கும் ஆசாரியாருக்கும் பசுவைத் தானஞ்செய்தலும், குற்றமற்ற இலக்கணங்களையுடைய இடபத்தைக் கடவுள் சந்நிதிக்குத் தானஞ்செய்தலும், தேவாலயத் திருப்பணியின் பொருட்டு சகடத்திற்கு எருது கொடுத்தலும், இளைத்த பசுவைக்கண்டு இரங்கித் தாம் வாங்கி வளர்த்தலும் பெரும் புண்ணியங்களாம்.


பசுக்கள் தரும் பால் தயிர் நெய், கோசலம், கோமயம் என்னும் பஞ்ச கௌவ்வியங்களையும் கடவுளுக்கு அபிஷேகம் பண்ணுவித்தல் வேண்டும். பாலை இரண்டு மாசம் செல்லும் வரையும் கன்று பருகும் படி விட்டு, பின்கறந்து கடவுளுக்கு அபிஷேகம் பண்ணுவித்தல் வேண்டும். கன்று பாலுண்டு முலையை விடுத்தபோது சலத்தினாலே முலையைக்கழுவி கறத்தல் வேண்டும். ஆசை மிகுதியினால் கன்றுக்குப் பால்விடாது கறந்தவன் நரகத்தில் வீழ்ந்து நெடுங்காலம் வருந்தி பின்பு பூமியிலே பிறந்து கடும்பசியினாலே வீடுகடோறும் இரப்பான். கபிலையின் பாலைக் கடவுளுக்கே கொடுக்க. அதனைத் தான்பருகில் நரகத்தில் வீழ்வர். புலையர்கள் பசுக்களின் சாலையில் புகுந்தார்களாயின் எண்ணில்லாத காலம் எரிவாய்நரகத்து வீழ்ந்து வருந்துவார்கள். அவர்களுக்குப் பரிகாரமில்லை. பசுக்களை இடர்நீங்கக் காக்காதவர்களும், மலட்டுப்பசுவின் மேலேனும் பாரம் ஏற்றியவர்களும் இடபத்திலேறினவர்களும் நரகத்தில் வீழ்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்வர்க்கஸ்ரீ. ச. மகேஸ்வரக் குருக்கள்
## (முன்னாள் இந்துக்குருமார் ஒன்றிய பீடாதிபதி)

**'அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான்'**



என்கிறார் திருவள்ளுவர், இவர்கள் வழிவந்த குருமார்கள், ஆண்டவனுக்கும் அடியார்களுக்கும் இடையில் இணைப்பாளராக விருந்து இறை பணியாற்றி வருபவர்கள். இவர்களுள் ஒருவராக விளங்கும் ஸ்ரீ சம்புகேஸ்வரக் குருக்கள் மகேஸ்வரக் குருக்கள் இந்து மக்களின் பெருமதிப்பிற்கு உரியவராகப் போற்றி மதிக்கப்படட்டவர்.

இறைபணியுடன் இணைந்து சர்வதேச இந்து மத குரு பீடாதிபதி என்ற உயர் நிலையிலிருந்து இந்து மக்களுக்கு நற்பணியாற்றியவர்.

சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், இணுவில் இந்துக்கல்லூரியிலும் யாழ் மத்திய கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியையும் யாழ். பரமேஸ்வரா கல்லூரியல் உயர்கல்வியையும் மேற்கொண்டார். பாரம்பரிய குருகுலக் கல்வியை கோண்டாவில் நாராயண சாஸ்திரிகள், யாழ்ப்பாணம் சீதாராம சாஸ்திரிகள், நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இவர் ஆரம்பத்தில் கூட்டுறவுச் சங்கத்தின் உதவிக் காசாளராகவும் பின்னர் உதவி முகாமையாளராகவும் யாழ்ப்பாணம், கொழும்பு நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களில் கடமையாற்றியிருக்கிறார். 1962 ஆம் ஆண்டில் சுதுமலையைச் சேர்ந்த தியாகராஜ ஐயர் சீதாலக்ஷ்மி அம்மாவை திருமணம் செய்துகொண்டதன் மூலம் இல்லற வாழ்வில் அடியெடுத்து வைத்தார். இல்லறவாழ்வின் பயனாக இரு புதல்வர்களும், ஒரு புதல்வியும் இவரது குடும்பத்தில் இருக்கிறார்கள்.

1965 ஆம் ஆண்டு முப்பதாவது வயதில் நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்களினால் இவருக்கு ஆச்சாரியா அபிஷேகம் (குருக்கள் நிலை அந்தஸ்து) செய்து வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மறுவருடம் (1966) முதன் முதலாக சுதுமலை அம்மன் கோயிலின் மகோற்சவ காலக் குருவாகவிருந்து கிரியைகளை நடத்தி வைத்தார்.

இதன் பின்னர் நூற்றுக்கும் மேற்பட்ட ஆலயங்களில் பிரதம குருவாகவிருந்து மகாகும்பாபிஷேகக் கிரியைகளை நடாத்திவைத்திருப்பதுடன், ஏராளமான மகா கும்பாபிஷேகக் கிரியைகளில் கலந்துகொண்டிருப்பதும், இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆலயங்களினதும் மகோற்சவ காலக் குருவாகப் பணியாற்றியிருப்பதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் 2010ஆம் ஆண்டில் நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் மகோற்சவத்தின் போதும் 1981 முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய மகோற்வசத்தின் போதும், 1983 ஆம் ஆண்டில் நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவத்தின் போதும் 1985 முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் நயினாதீவு ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோயில் மகோற்சவத்தின் போதும் பிரதம குருவாகவிருந்து உற்சவக் கிரியைகளை சிறப்பாக நடத்தி வைத்திருப்பதை குறிப்பிட வேண்டும்.

சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் இறைபணிக்கும் மேலாக 1992 முதல் 2002ஆம் ஆண்டுவரை சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவராகவும் 2003 முதல் 2006 ஆம் ஆண்டு வரை யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினராகவும் பணியாற்றியிருப்பதுடன் 2003 ஆம் ஆண்டிலிருந்து இப்போது வரை சர்வதேச இந்துமத குருபீடாதிபதியாகவிருந்து ஆற்றிவரும் சமயம் சார்ந்த சமூக நல சேவையும் சிறப்பாக போற்றத்தக்கது.

இலங்கையில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் இவரது இறைபணி விஸ்தீரணம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். 2001ஆம் ஆண்டில் கனடாவில் ரொரண்டோ மாநிலத்திலுள்ள ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஸ்ரீ சக்கர பிரதிஷ்டை மற்றும் மண்டலாபிஷேகப் பூர்த்தி கிரியைகளை நடத்தி வைத்திருப்பதை முக்கிய நிகழ்வாகச் சொல்லலாம்.

பன்மொழிப் புலமை மிக்கவரான மகேஸ்வர சிவாசாரியார், ஸ்ரீ சக்கர யந்திர பூஜை பற்றிய நூலை எழுதியுள்ளார் ஆனைப்பந்தியில் அந்தணர்களுக்கான குருகுல உருவாக்கத்திலும் முனைப்புக்காட்டியதுடன், குருகுலத்தில் அந்தண மாணவர்களுக்கு சமஸ்கிருதம் மற்றும் ஆகம வகுப்புகளுக்குச் சிறந்ததோர் வழிகாட்டியாக இருந்து பணியாற்றினார்.

இவரது பணியைப் போற்றும் வகையில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் "சிவத்தமிழ்" விருது வழங்கி கௌரவித்தது. மேலும் கிரியாகலாப முக்தாமணி, ஆகம வித்தகர், கிரியாதத்துவநிதி, கிரியாகலாப பாரதி போன்ற பல பட்டங்களும் விருதுகளும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டிருப்பதையும் சிறப்பாக குறிப்பிட வேண்டும்

**செருத்துணை நாயனார்.**

சோழநாட்டிலே தஞ்சாவூரிலே வேளாளர் மரபிலே பிறந்தவர்தான் செருத்துணை நாயனார். சிவபக்தி சிவனடியார் பத்தியில் சிறந்தவர். திருவாரூர் சென்று தொண்டு செயதவர். அங்கு கழற்சிங்க நாயனார் மனைவியின் பொருந்தாத செயலினால் அவர் மூக்கரிந்த வரலாற்றைக் கழற்சிங்க நாயனார் சரித்திரத்துட் கண்டோம். செருத்துணை நாயனார் தொடர்ந்து சிவப்பணி செய்து சிவன் திருவடி நீழலை அடைந்தார்.

இவர் முத்தியடைந்த திருநாள் **ஆவணிப் பூசம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







பன்னிரு திருமுறை முற்றோதல் - 2021


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org











**முன்னைய நிகழ்வுகளின் நிழல் தொகுப்பு**

திருமகள் அழுத்தகம், சுன்னாகம். தொ.பே.: 021 224 4510

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org